விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 22 வியாழக்கிழமை (06.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199

## இராணுவத்துக்கு ஆபத்து
## மகாநாயக்கர்களிடம் சென்ற முன்னாள் இராணுவத் தளபதி



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க உள்ளிட்ட முன்னாள் பாதுகாப்புத்தரப்பு அதிகாரிகள் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகளை சந்தித்துள்ளனர்.

காணாமல்போனோர் தொடர்பான பணியகம் மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் 23☛

## வித்தியா படுகொலை வழக்கு 18ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் நீதாய விளக்க முறையிலான (ரயல் அட்பார்) விசாரணைகளின் தொடர் விளக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அடுத்து 19, 20 ஆம் திகதிகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

வழக்கின் நீதாய விளக்க (ரயல் அட்பார்) விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பித்து 6 நாட்களாக தொடர் விளக்கம் யாழ் நீதிமன்ற மூன்றாம் மாடியில் இடம்பெற்றது.

குறித்த வழக்கின் எதிரிகளான 9 பேரும் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 1,2,3,6 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான மகிந்த 23☛

## பரீட்சை திகதி அறிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்துக்கான கல்வி பொ.த.உயர்தரப் பரீட்சை, 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைகள் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதியும், 20 ஆம் திகதியும் ஆரம்பிக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் உயர்தரப் பரீட்சைகள் 2 ஆயிரத்து 230 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் இந்தப் பரீட்சை 23☛

## மாலைக்கு பதில் தூக்குக் கயிறா?
## விமல் கேள்வி

(கொழும்பு)

நாட்டில்மூண்ட கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த வர்களுக்கு மலர் மாலை அணி விக்க வேண்டும் எனினும் அதனை விடுத்து அவர்களின் கழுத்தில் தூக்கு கயிற்றை அணிவிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. 22☛

# பௌத்த பீடங்களின் அறிவிப்பை
# மீள் பரிசீலனை செய்யக் கோரிக்கை

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்போ அல்லது அரசியலமைப்பு திருத்தமோ மேற்கொள்ளக்கூடாது என அரசை 3 மகாநாயக்கர்களும் கூட்டாகக் கோரியுள்ள நிலையில், அந்த அறிவிப்பை மீள்பரிசிலனை செய்யவேண்டும் எனவும் அது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் நேற்று கோரியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## சைட்டத்தை தடைசெய்ய
## எதனையும் செய்வோம்

(கொழும்பு)

சைட்டம் மருத்துவக் கல்லூரியைத் தடை செய்வதற்காக தேவையான எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க தயார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) தெரிவித்துள்ளது. சைட்டம் தனியார் மருத்துவக் கல் 22☛

## தீயை மூட்ட முயலுகின்றனர் – ரணதுங்க

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டம் குறித்து பல்வேறு கதைகளை பேசுவோர் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு 22☛

## மாணவர் ஐவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லகிரு வீரசேகர உள்ளிட்ட ஐவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, எதிர்வரும் 19 ஆம் திகதி வரை சந்தேக நபர்களது விளக்கமறியலை நீடித்து 22☛

## வித்தியாவின் உயிர் 3 காரணங்களால் பிரிந்தது; சட்டவைத்திய அதிகாரி நேற்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா குறுகிய நேரத்துக்குள் பலரால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதுடன் மூன்று காரணங்களால் அவரது உயிர் பிரிந்துள்ளது என வித்தியாவின் உடலினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி யு.மயூரன் நீதாய விளக்க நீதிமன்றில் நேற்றையதினம் சாட்சியமளித்துள்ளார்.

அதாவது கழுத்தில் போடப்பட்ட சுருக்கு, வாய்க்குள் திணிக்கப்பட்ட உள்ளாடையினால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் மற்றும் தலையின் பிடரிப் பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவின் காரணமாகவே வித்தியா உயிரிழந்துள்ளார் என தனது சாட்சியத்தில் விளக்கமளித்துள்ளார். மாணவி வித்தியா படுகொலை வழக்கின் நீதாய விளக்க விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்றில் நேற்றைய தினம் 6 ஆவது நாளாக மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில்நடைபெற்றது. இதன் போது வழக்கின் 23 ஆவது 23☛

## ஊழல் ஒழிப்பு செயலகம்; எந்த திருடரையும் பிடிக்கவில்லை
## ஜனாதிபதி விசனம் என்கிறார் ராஜித

(கொழும்பு)

ஊழல் ஒழிப்பு குழு செயலகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் அதிருப்தியை வெளியிட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த செயலகத்திற்கு பல மில்லியன் ரூபாய் செலவிட்ட 23☛



## கீழ்த்தரமான சதிகளால் ஆட்சிக்கு வரமுடியாது
## ஜனாதிபதி

(கொழும்பு)

ஆட்சியிலுள்ளபோது கோடிக் கணக்கில் மக்கள் பணத்தையும், அரச சொத்துக்களையும் கொள்ளையடித்து அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பாரிய ஊழல் மோசடி 22☛



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புலிகள் நாள் நினைவுகூரப்பட்டது



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளினால் ஜூலை 5-ம் திகதி நினைவு கூரப்படுகின்ற கரும்புலிகள் நாள் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். பல்கலை வளாகத்தில் நினைவு கூரப்பட்டது. (மு)


## ஆட்டோ விற்பனைக்கு

கொள்வனவு செய்து எட்டு மாதங்களேயான நல்ல நிலையில் உள்ள பேக்கரி உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்வதற்குரிய ஆட்டோ ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு

077 361 6798

(C-8975)

## கடை வாடகைக்கு விடப்படும்

விசுவமடுச் சந்திக்கு அருகாமையில் முல்லை-பரந்தன் பிரதான வீதியில் 48 அடி அகலம் 55 அடி நீளம் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட அழகான கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 239 1080

(C-8967)

## கோவில் திருத்த வேலைகளுக்கான விலைமனு கோருதல்

கோவில் திருத்த வேலைகளுக்கு விலைமனு கோரப்படுகின்றது. புதிய அமைப்பு, அமைப்பில் திருத்தம், வர்ண வேலைகள் என பல வேலைகள் உண்டு. இதற்காக அனுபவம், தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விலைமனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. வேலை விபர அட்டவணையை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த விளம்பர திகதியில் இருந்து 15 நாட்களுக்குள் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இங்ஙனம்: தலைவர்
தொல்புரம் வழக்கம்பரை
முத்துமாரியம்மன் தேவஸ்தான
பரிபாலனசபை

தொடர்புகளுக்கு:
செயலாளர்
077 350 2814

(9699)

# VACANCIES - UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF ENGINEERING

**Senior Professor/ Professor** in Civil Engineering/ Computer Engineering/ Electrical and Electronic Engineering/Mechanical Engineering

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in *Civil Engineering/ Computer Engineering/ Electrical and Electronic Engineering/ **Mechanical Engineering /*** Engineering Mathematics

**Note:**
* For positions in **Civil Engineering** special consideration will be given to those who have sound knowledge in Coastal Engineering/Hydraulic Engineering

**For positions in **Mechanical Engineering** special consideration will be given to those who have sound knowledge in Mechanical, Production and Process Engineering

***For positions in **Engineering Mathematics** special consideration will be given to those who have sound knowledge in Engineering Mathematics.

## FACULTY OF SCIENCE

**Senior Professor/ Professor** in Computer Science/ Botany/ Fisheries / Zoology / Mathematics

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Computer Science / Fisheries / Mathematics/ Statistics

## FACULTY OF TECHNOLOGY

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary)** in *Technological Mathematics / Information Technology

**Note:**
* For positions in **Technological Mathematics** special consideration will be given to those who have sound knowledge in Technological Mathematics with good background knowledge in Statistics

## UNIT OF SIDDHA MEDICINE

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Siddha Medicine.

**Note:**
Preference will be given to those who have specialization at postgraduate qualification in Gunapadam and Mahalir Maruthuvam for the post of **Senior Lecturer Grade I/Grade II in Siddha Medicine.**

Applications which have been sent in response to our advertisement dated 22.04.2016 will also be considered. Hence those applicants need not apply again for the **Post of Senior Lecturer Grade I/ Grade II/ Lecturer (Probationary) in Siddha Medicine.**

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.128,870 – 11x2,740– 159,010/-p.m |
| Professor | Rs.108,490 – 13x2,520– 141,250/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.87,415 – 7x2,020– 101,555/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.76,275 – 11x1,520– 92,995/-p.m |
| Lecturer (Probationary) | Rs.53,235 – 10x1,240 – 65,635/-p.m |

**Note:**
The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/ 2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:

i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Probationary) | - 115% |

ii) Additional monthly allowance – 20% of the basic salary (for all the post)
iii) Research allowance - 35% (Payable based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**
I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

Closing dates (application should reach us on or before the given dates):

| | |
|---|---|
| **Post of Senior Professor/ Professor** | **-09.10.2017** |
| **Other posts** | **-08.08.2017** |

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** position should submit **separate application.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA.**
**05.07.2017**

(C-8970)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க மகாநாயக்கர்கள் கடும் எதிர்ப்பு

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கும் பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் முயற்சிகளை கைவிடுமாறு அரசாங்கத்திடம் மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் சங்க சபாக்களும் கோரியுள்ளனர்.

கண்டியில் நேற்று முந்தினம் நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதையும் கைவிடுமாறும் அரசாங்கத்திடம் பௌத்த பீடங்கள் கோரியுள்ளன.

அதேவேளை சியாம், அமரபுர, ராம்ன்ய பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் கையொப்பங்களுடன் கூடிய, மனுவொன்று ஜனாதிபதியிடம் சங்க சபாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளால் இன்று கையளிப்படவுள்ளது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

## மகாநாயக்க தேரர்களின் கடும் எதிர்ப்பால்

# காணாமற் போனவர்கள் குறித்த சட்டமூல சமர்ப்பிப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

**காணாமற்போனவர்களைக் கண்டறியும் நோக்குடன் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்படவிருந்த விசேட சட்ட மூலம் பௌத்த பீட மகாநாயக்க தேரர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.**

இது தொடர்பில்நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சட்ட மூலத்திலுள்ள பிரச்சினைகள் சரிசெய்யப்பட்டதன் பின்னர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்வைக்கப்பட்டிருந்த காணாமல் போனவர்கள் தொடர்பான சட்ட மூலத்தின் சிங்கள, தமிழ் பிரதிகளை பாராளுமன்றத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் வரையில் இச்சட்ட மூலத்தை ஒத்திவைக்குமாறு மெத கொட அபயதிஸ்ஸ தேரர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மீண்டும் கவனத்தில் கொள்ளுமாறு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்கவும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இல்லாத பிரச்சினைகளை உருவாக்கும் அரசியல் யாப்பு நாட்டுக்குத் தேவையற்றது என மூன்று மகாசங்கத்தினரும் நேற்று முந்தினம் ஏகமனதாக தீர்மானம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியலமைப்பை எதிர்ப்பது நாட்டைச்சீரழிக்கும் செயலே

## அமைச்சர் மனோ காட்டம்



அரசியலமைப்பை எதிர்ப்பது நாட்டை சீரழிக்கும் செயற்பாடாகவே அமையுமெனதேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முந்தினம் நடைபெற்றநிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமஷ்டி இன்றி பௌத்த மதத்திற்கும் முன்னுரிமைவழங்கி தயாரிக்கும் இந்த அரசியல்யாப்பிற்கே எதிர்ப்பு தெரிவிக்கப்படுமாயின் நாடு அழிவை நோக்கி செல்வதை யாராலும் தடுக்க முடியாதென அமைச்சர்மனோ மேலும் தெரிவித்துள்ளார்.. (இ-7)

## தொடரும் போராட்டம்



காணாமற்போனவர்களின் உறவினர்களால் யாழ். மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 113 ஆவது நாளாகவும் இடம்பெற்றது. (இ-10-19)

## ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு

யாழ்.மருத்துவபீட ஆசிரிய சம்மேளனம் இன்று ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. தற்போதைய மருத்துவ மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவானதும் நிரந்தரமானதுமான தீர்வைப்பெற்றுமீளவும்கல்வி செயற்பாடுகளை ஆரம்பிக்க கோரியும் இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது என யாழ். மருத்துவபீட ஆசிரிய சம்மேளன செயலாளர் க.குருபரன் அறிவித்துள்ளார். (இ

# நல்லாட்சி அரசாங்கத்திடமும் பொருளாதார கொள்கையில்லை

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டை ஆட்சி செய்த எந்த அரசாங்கமும் நாடு சொத்துக்களை சம்பாதிக்கும் பொருளாதார கொள்கைகளை உருவாக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டை முன்னர் ஆட்சி செய்தஅரசாங்கங்களைபோன்று தற்போதைய அரசாங்கத்திற்கும் பொருளாதார கொள்கை இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில்உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அத்துடன் மக்களின் நிவாரணங்களை இரத்துச் செய்து வருவதாகவும் விவசாய [illegible]



தொழில் திணைக்களமோ நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

## வசீம் தாஜுடீன் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்

### அமைச்சர் ராஜித தகவல்

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று பங்கேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தாஜுடீனை யார் கொன்றார்கள் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது பற்றிய விடயங்கள் தமக்குத் தெரியும் என அவர் தெரிவித்தார்.

தாஜுடீன் கொலை தொடர்பான தொலைபேசி உரையாடல்களும் தற்போது வெளியாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கள்வர்களை பாதுகாக்கும் தரப்புக்கள் எதிர்வரும் காலங்களில் ஒன்றிணைந்து செயற்படும் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா உடனான போட்டிகள் ரத்தானதால் நிதியிழப்பு; பாக். கிரிக்கெட் சபை குற்றச்சாட்டு

இந்தியா உடனான திட்டமிட்ட போட்டிகள் ரத்தானதால் கடும் நிதியிழப்பை சந்தித்துள்ளதாக கூறியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இது தொடர்பாக ஐ.சி.சி.யிடம் முறையிட உள்ளதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் 2009ஆம் ஆண்டு இலங்கை வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அந்நாட்டில் கிரிக்கெட் போட்டியில் விளையாட அனைத்து அணிகளும் மறுத்துவிட்டன. இந்தியாவும் அந்நாட்டுடனான அனைத்து தொடர்களையும் ரத்து செய்தது. கடந்த 2012-ம் ஆண்டு பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் போட்டியில் விளையாடியது.

அதை தொடர்ந்து 2014-ம் ஆண்டு நடைபெற்ற சந்திப்பின் போது 2015 - 2021 கால கட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் ஆறு இருதரப்பு கிரிக்கெட் தொடர்களில் விளையாட சமமதம் தெரிவித்து இந்திய கிரிக்கெட் சபை ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தது. ஆனால், அதன் பின்னர் இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளில் பல பிரச்சினைகள் வந்ததை தொடர்ந்து இந்திய அணி பாகிஸ்தானுடன் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மததிய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது.

அதன் காரணமாக இதுவரை ஒரு இருதரப்பு தொடர் கூட நடத்தப்படவில்லை. திட்டமிட்டபடி போட்டிகள் நடத்தப்படாததால் பாகிஸ்தான கிரிக்கெட் சபைக்கு சுமார் 447 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த தொகையை பி.சி.சி.ஐ. இழப்பாக தர வேணடும் எனவும் பாகிஸ்தான் தெரிவித்தது. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த பி.சி.சி.ஐ.க்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்திருந்தது.

கடந்த மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற மூன்று கட்ட பேச்சுவார்த்தையிலும் இந்திய அதிகாரிகள், இந்திய அரசு அனுமதி அளிக்காததால் இருதரப்பு போட்டிகள் நடத்த வாய்ப்புகள் இல்லை என திட்டவட்டமாக தெரிவித்தனர். எனவே இந்த பிரச்சினையை தீர்க்க ஐ.சி.சி.யின் பிரச்சினைகளை தீர்க்கும் குழுவிடம முறையிட இருப்பதாக பாகிஸ்தான் கிரக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


## சாரதிகள் தேவை

அதிகாலைவேளை பத்திரிகை விநியோகம் செய்வதற்காக வாகன சாரதிகள் தேவை.

சாரதிகளுக்குரிய அத்தனை தகுதிகளும் உடையவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை பொது முகாமையாளர் வலம்புரி, இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
வலம்புரி


# அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான

## திறந்த போட்டிப் பரீட்சை - 2017 (III)

மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.08.04 ஆகும்.

பாடரீதியாக காணப்படும் வெற்றிட எண்ணிக்கை விபரம

| | தமிழ் | வரலாறு | குடியியல் | தகவல் தொழில்நுட்பம் | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | வழிகாட்டலும் ஆலோசனையும் | இரண்டாம் மொழி (சிங்களம்) |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | - | - | - | - | - | 4 |
| வலிகாமம் | 10 | 4 | 2 | 4 | 1 | 6 | 8 |
| வடமராட்சி | 1 | 3 | 3 | 2 | 3 | 3 | 6 |
| தென்மராட்சி | - | 5 | 3 | 2 | - | 3 | 5 |
| தீவகம் | 8 | 5 | 7 | 3 | 5 | 2 | 6 |
| கிளிநொச்சி | 12 | 6 | 6 | 4 | 11 | 8 | 8 |
| முல்லைத்தீவு | - | 4 | 3 | 2 | 8 | 7 | 4 |
| துணுக்காய் | 7 | 2 | 1 | 2 | 9 | 4 | 9 |
| வவுனியா வடக்கு | 4 | 4 | 5 | 2 | 5 | 2 | 8 |
| வவுனியா தெற்கு | - | 2 | 3 | 2 | 6 | 2 | 7 |
| மன்னார் | 11 | 2 | - | 2 | 8 | 8 | 8 |
| மடு | 8 | 3 | 6 | 2 | 1 | 2 | 5 |
| மொத்தம் | 61 | 40 | 39 | 27 | 57 | 47 | 78 |

( "—" என்ற அடையாளம் வெற்றிடங்கள் இல்லை என்பதைக் குறிக்கும்)

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.ஏ.மோகன்ராஸ்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
06.07.2017

(8970)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 20 - 03 - 1956



மறைவு 06 - 06 - 2017

கடந்த 06.06.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தப்பு விமலராசா

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வகையிலும் உதவி புரிந்தவர்களிற்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களிற்கும் மேலும் பல வழிகளிலும் உதவிகளைப் புரிந்து எமது துயரில் தோள் கொடுத்தவர்களிற்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 06. 07.2017 வியாழக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார் த்திப்பதோடு பகல் 11. 00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சித்திராங்கர் வீடு
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(சி-8974)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால**
**தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் - 2017

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப்படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | : ரூபா. 500.00 + VAT + NBT |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 07.07.2017 தொடக்கம் 19.07.2017 பிற்பகல் 2.30 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் | : 20.07.2017 முற்பகல் 09.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | : 20.07.2017 முற்பகல் 10.00 மணிக்கு |

➢ தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் – ரூபா. 2,340.00

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப் பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 20.07.2017 முற்பகல் 09.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்திபெற்றவர்கள் கேள்வித் தொகையினை 21.07.2017 பிற்பகல் 02.30 மணிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மற்றும் நிபந்தனைகளை மாநகர சபை, நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு:

- ❖ ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும் உற்சவ காலத்துக்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி திறந்து வியாபாரம் நடாத்தவும், விளம்பரங்கள், விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு அனுமதியின்றி நடாத்தப்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.
- ❖ கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
- ❖ உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ குத்தகைக்கான விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் ஆவணத்தில் அடங்கிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டே விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டும்.

பொ.வாகீசன்
ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(8972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகள் பறிமுதல்



யாழ்ப்பாணத்திற்கு கடத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த முதிரை மரக்குற்றிகளை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றினர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் புத்தூர்ச்சந்திப் பகுதியில் இருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான லொறியொன்றை மறித்துள்ளனர். இதன்போது லொறிச் சாரதியும் அதிலிருந்த ஒருவரும் லொறியைக் கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதையடுத்து லொறியை சோதனையிட்டபோது அதில் பெறுமதியான முதிரைமரக் குற்றிகள் காணப்பட்டுள்ளன.

கைப்பற்றிய லொறியை கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். இந் நிலையில் தப்பிச் சென்றவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-89)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 2017.07.10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பிரதேச செயலாளர் ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ


## ஏல விற்பனை

எமது பாடசாலையில் 20.07.2017 அன்று முற்பகல் 11.30 மணிக்கு பின்வரும் பொருட்களுக்கான ஏல விற்பனை இடம்பெறும். மண்வெட்டி-01, தள்ளு வண்டி-01, குப்பை வாரி-01, கோர்ஸ்பைப்-01, பெரிய கிடாரம்-01, றேடியோ-01

அதிபர்,
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்,
(C-8968 )


# பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பான உடைகளை அணியலாம்-கல்வியமைச்சு

(கொழும்பு)

நாட்டில்டெங்கு நோய்மிகவும் தீவிரமாக பரவி வரும் நிலையில், பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பான உடைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்லலாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வியமைச்சு நேற்று புதன்கிழமை விசேட சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டு இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள்தம்மை தாக்காதவாறு உடம்பை முழுமையாக மறைக்கும் அல்லது பாதுகாப்பான ஆடைகளை அணியுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தாக்கத்தால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 600இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதோடு, அவர்களுள் பாடசாலை மாணவர்களும் கணிசமான அளவு உள்ளடங்கியுள்ளனர்.

இதேவேளை, கடந்த 3 ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் டெங்கு நோய்த் தாக்கத்தால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட மாகாண சபை உறுப்பினர்

உமாஓயா திட்டம் ஏற்படுத்தியிருக்கும் பிரச்சினை பற்றி ஆராய்வதற்காக அமைச்சர் மகிந்த அமரவீரவும், பிரதியமைச்சர் அநுராத ஜயரத்னவும் நேற்று முன்தினம் பண்டாரவளைக்கு சென்றுள்ளனர். இந்த நிலையில் பண்டாரவளை உடபேருவ பிரதேசத்திலுள்ள வீடொன்றை பரிசோதித்து கொண்டிருந்த போது அங்கு வந்த மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன, அவர்களுடன் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். அதேவேளை, சம்பவ தினத்தன்று 2 மணியளவில் பண்டாரவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த கலந்துரையாடலுக்கு மாலை 3.45 வரை அமைச்சர்கள் வருகை தராததால் கலந்துரையாடலுக்காக வருகை தந்திருந்த பலர் அங்கிருந்து வெளி யேறியுள்ளனர். (இ-7)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி
**Dr.S.S.சர்மா குருஜீ**
82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 784 1558 (சி. 8817)



# 1 ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில்
1998 - 01 - 28



ஆண்டவன் மடியில்
2016 - 06 - 19

கடந்த 19.06.2016 அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப ஒளி விளக்கு

அமரர்
## பாலச்சந்திரன் பிரியங்கா

அவர்களின் முதலாம் வருட திவசக் கிரிகைகள் நாளை 07.07.2017 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரியமானவளே பிரியங்கா!
வாழ்காலம் வரை
நெஞ்சினைத் தொட்டு
உறவுகளினை எல்லாம்
தவிக்கவிட்டுப் போனாயா
பாதி வழிதனிலே!

திசைகள் பல தேடுகிறேன்
திக்குத் திக்காய் ஓடுகிறேன்
காற்றோடு காற்றாய்
சூக்குமம் போல்
கலைந்து விடுகிறது
உன் உருவம்
பல்கலைகளையும்
ஆர்வத்தோடு கற்று



பண்பாடு போற்றி பாங்காய்
ஆரம்பக் கல்விதனைக்
கண்ணெனக் கற்று
சிறப்பாக கணிதப் பிரிவில்
கண்ணியமாய்க் கற்று
இடைதனிலே

சொல்லொணாத் துயரில் தவிக்கவிட்டுச்
சொர்க்கம் புகுந்தனையோ
நல்லாரை நாதன் அரவணைப்பான்
நானிலத்தில் நவின்ற மொழி இஃது
உன் சொந்தம் இருந்து
வாடுதம்மா உன் பிரிவால்
மீண்டும் ஒருமுறை வந்து
எம்மைப் பார்க்காயா எம் சோதரியே!

ஆதி கோவிலடி,
வல்வெட்டித்துறை.
(9676)
இங்ஙனம்,
குடும்பத்தினர்


# இராசி பலன்

06.07.2017
(ஆனி 22, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி முழுவதும்
அனுசம் முற்பகல் 10.26 மணி வரை
சுபநேரம் 7.28 - 8.58 மணிவரை
இராகுகாலம் 1.28- 2.58 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை | | புதன் |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

**மீனம்** தடைகள் விலகி தனவரவு கள் ஏற்படலாம், கடுமை யான எதிர்ப்புகள்கூட திடீ ரென சாதகமாகிவிடும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மேடம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, உணர்ச்சி வசப்படு வதைத் தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் இடையூறுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**இடபம்** கடன் தொல்லைகள் குறையும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்** வசதி வாய்ப்புக்களைப் பெரு க்கிக் கொள்ள முற்படு வீர்கள், நண்பர்கள் உறுது ணையாக இருப்பர், செய் தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** பலரது அன்பிற்கும் பாத்திர மாவீர்கள், திடீர் பணவரவால் மனமகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு, பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப் புண்டு.

**சிம்மம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** உடனிருப்பவர்களை அனுச ரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட் டும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் அலோசனை கேட்பீர்கள்.

**விருச்சிகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் வளர்ச்சியுண்டு.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், வழிபாடு மகத்துவம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை வீதி பொலிவுபெறுமா?







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-பொன்னாலை (மானிப்பாய்) வீதி பயணிக்க முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வீதி எப்போது காப்பெற் வீதியாக மாற்றப்படும் எனவும் மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

யாழ்.ஓட்டுமடம் சந்தியிலிருந்து பொன்னாலை வரையான வீதி இன்னும் உரிய முறையில் புனரமைக்கப்படாமல் உள்ளது.

இதேவேளை வீதி அகலிப்பு பணிகள் இடம்பெறவுள்ளதாக சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலாளர்கள் அறிவித்திருந்த நிலையில் கண்துடைப்பு வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக மானிப்பாய் கட்டுடை, சண்டிலிப்பாய் பகுதிகளில் தற்காலிகமாக கருங்கற், சல்லிகள் இடப்பட்டு திருத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் மகிந்த ஆட்சிக்காலத்தில் பல வீதிகள் காப்பெற் இடப்பட்டு புனரமைக்கப்பட்ட போதும் மானிப்பாய் வீதி திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டது.

இந் நிலையில் மைத்திரி ஆட்சியிலாவது குறித்த வீதிக்கு காப் பெற் இடம்படும் என எதிர் பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் தற்போது வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே அதிகளவான மக்கள் பயணம் செய்யும் பொன்னாலை வீதியை இனியாவது புனரமைக்க அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் முன்வர வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை. (இ

## கிராம மட்டத்தில் செயற்படும்
# குட்டி பாராளுமன்றமே அபிவிருத்திச் சங்கம்
## வேலணை ஆர்.டி.ஓ.கோகுலன் தெரிவிப்பு

கிராம மட்டத்தில் செயற்படும் குட்டி பாராளுமன்றமே கிராம அபிவிருத்திச் சங்கம் என்று வேலணை கிழக்கு மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தெரி வித்தார்.

வேலணை கிழக்கு மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் 2ம் வட்டாரம் வேலணையிலுள்ள கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்ந்து உரையாற்றுகையில், பாராளுமன்ற ஜனநாயக முறைமையை விளங்கிக் கொள்ளும் ஒரு நிறுவனமாக கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக முறைமை விளங்கு கின்றது. பாராளுமன்றத்திற்கு சபாநாயகர் பதவி போன்று கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலைவர் பதவி காணப்படு கின்றது. அங்கு பிரதமர் போன்று இங்கு செயலாளர் பதவி காணப்படுகின்றது. அங்கு நிதியமைச்சர் பதவி போன்று இங்கு பொருளாளர் பதவி காணப்படுகின்றது. அங்கு ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி போன்றதே இங்கு கிராமத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் நிர்வாக உறுப்பினர் பதவி, பாராளுமன்ற நடவடிக்கைகளை பதிவு செய்யும் ஆவணமாகிய ஹன்சாட் அறிக்கை போன்றதே கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரின் அறிக்கை.

எனவே பாராளுமன்ற ஜன நாயகக் கட்டமைப்பிற்கு ஏற்ற வகையில் கிராம மட்டத்திலிருந்து அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் ஆளுமை மிக்கவர்களை உருவாக்குவதற்கும் அவர்களின் செயற்பாடுகளு க்கான பயிற்சிக்களமாகவும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் திகழ்கின்றன என அவர் மேலும் தெரி வித்தார். குறித்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக திருமதி. எஸ். ஜெயகௌரியும் செயலாளராக இ.சிவநாதனும் பொருளாளராக இ.சுபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் ஜே-16 கிராம உத்தியோகத்தர் திருமதி. இ.பரமேஸ்வரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோக்த்தர் இ.சுகிர்தன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ந.சிவகுலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(இ-3)

## 2 மோ.சைக்கிள்கள் மோதி விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கிராமக் கோட்டு சந்தியில் மோட்டார் சைக்கிள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் கிராம கோட்டடி புலோலியைச் சேர்ந்த முகுந்தன் வசந்தி(வயது40), துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த செல்வகுமார் சயந்தன்(வயது-19) ஆகிய இருவர் படுகாயமடைந்தனர்.

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் சந்தியால் திரும்ப முற்பட்ட போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இரண்டு நாட்கள் முத்தமிழ் விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்றும் (06.07.2017) நாளையும் (07.07.2017) கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. முதல்நாள் நிகழ்வுகள் நாடக விழாவாகவும் இரண்டாம் நிகழ்வுகள் இயல் இசை விழாவாகவும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று இடம்பெறும் நாடக விழா கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் மீப்பேகற்கை நிலையத்தில் உள்ள கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் எஃப்.ரி. அல்பிரட்டும் சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க. திலகநாதனும் கலந்து கொள்வர். நிகழ்வில் ஆசியுரையை கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கமும் வாழ்த்துரையை மூத்த விரிவுரையாளர் வி.எஸ். குணசீலனும் வழங்குவர். தமிழ் மணம், விசப் பாம்புகள், எப்போது விடியல், சிந்தனை செய் மனமே என்ற தலைப்பில் 40 நிமிடங்களுக்கு ஆற்றுகை செய்யப்படும். நாடகங்கள் போட்டி அடிப்படையில் மேடையேறவுள்ளன.

இரண்டாம் நாள் இயல் இசை விழா கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும். இதில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தயாபரன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்றக் காப்பாளர் அ.பௌநந்தியும் வாழ்த்துரையை விரிவுரையாளர் கழகத் தலைவர் செ.செல்வமலரும் ஆற்றுவர். தங்கப் பதக்கத்திற்கான பட்டிமண்டபப் போட்டி மற்றும் விழாவையொட்டி நடத்தப்பட்ட கலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆற்றுகைகள் என்பன மேடையேற்றப்படவுள்ளன. (இ-3)




## பொலித்தீன் பாவனையை முற்றாக தடை செய்வதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபையால் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்வோம் எனும் தொனிப்பொருளில் திண்மக் கழிவகற்றல் செயற்பாடு கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 17 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமசேவகர் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ-10-102)

## ‘எலிப்பொறி’ திரைப்படக் காட்சி



யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் மாதாந்தம் திரைப்படக் காட்சிகள் இலவசமாக காண்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் எதிர்வரும் 09.07.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு “எலிப்பத்தாயம்” (எலிப்பொறி) எனும் மலையாளத் திரைப்படம் யாழ். பொதுசன நூலக குளிரூட்டப்பட்ட சிறிய கேட்போர் கூடத்தில் இலவசமாக காட்சிப்படுத்தப்படவுள்ளது. (இ-51)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

யாழ். ஆறுகால் மடம் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் க.தம்பிராசா தலைமையில் யாழ். வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார். (இ-10)

## சமகால அரசியல் கருத்தரங்கு

இலங்கை தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதியின் சமகால அரசியல் கருத்தரங்கும் கேள்வி பதில் நிகழ்ச்சியும் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் வடக்கு வீதி மண்டபத்தில் (சிறீ முருகன் மாதர் சங்கம்) வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு வெளியிடப்படும்

## அமைச்சர் ராஜித உறுதி



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது வெளியிடப்படுவதற்கே அன்றி, வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதற்கு அல்ல என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் 62 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணையையே செயற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அஸ்கிரிய பீடத்தில் கூடிய மகாநாயக்கர்கள், புதிய அரசியலமைப்பு அவசிய மற்றது என தீர்மானித்தனர். இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என இதன்போது ஊடகவியலாளர்கள் வினவியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சபையின் நடவடிக்கைகள் முன்னோக்கி எடுத்துச் செல்லப்படும் எனவும், இதன் இறுதி முடிவை பாராளுமன்றமே எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன தற்போதுள்ள அரசியலமைப்பை கொண்டு வந்த வேளை, எதிர்த்தவர்கள், இப்போது அதனையே செயற்படுத்த வேண்டும் எனக் கூறுவது ஏன் என்று தெரியவில்லை எனவும் ராஜித இதன்போது கூறியுள்ளார்.

அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் முதலில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் பின்னர் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்த அமைச்சர், சட்டப்படி அந்த நடவடிக்கைகள் வருங்காலங்களில் முன்னெடுக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாம் மற்றும் இரண்டாம் அரசியல் யாப்புகள் நிறைவேற்றப்பட்ட போது அல்லது மகிந்த ராஜபக்ஷவால் 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, இதுபோன்ற ஜனநாயக செயல்முறை பின்பற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவர் சுயவிருப்புடன் தனது அதிகாரங்களை ஜனநாயகவாதியாக மக்களுடன் பகிர்ந்து கொள்ள சட்டம் மற்றும் நிலவும் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து செயற்படும் வேளை, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது ஏன் எனவும் ராஜித இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# புதிய அரசியலமைப்புத் தொடர்பில் இறுதித்தீர்மானம் இன்னுமில்லை

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

புதிய அரசியலமைப்பு தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான தயாசிறி ஜயசேக தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அரசியலமைப்பு தொடர்பில் மூன்று பீடங்களின் தலைமை மகாநாயக்க தேரர்களின் தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "அரசியலமைப்பு தொடர்பில் பல்வேறு கட்சிகள் பல்வேறு யோசனைகளை முன்வைத்துள்ளன. அவற்றை வைத்துக் கொண்டே பல்வேறு அமைப்புக்களும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. எனினும் அரசியலமைப்பின் இறுதி வரைவு இன்னும் தயாரிக்கப்படவில்லை. இறுதி வரைவு தயாரிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் விவாதம் மேற்கொள்ள நாம் தயார்" என தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை தயாரிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில், புதிய அரசியலமைப்போ, அரசியலமைப்பு திருத்தமோ இலங்கைக்கு தேவையில்லை என மூன்று பீடங்களின் தலைமை மகாநாயக்க தேரர்கள் நேற்று முன்தினம் ஏகமனதாக தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பா.ஜ.க.தமிழக தலைவி தமிழிசை இலங்கையில்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியா, பாரதீய ஜனதா கட்சியின் தமிழக தலைவி தமிழிசை சௌந்தரராஜன் நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்துள்ளார்.

இந்த நிலையில் அவரை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் சிறீநேசன் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

மேலும், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மேற்படி குழுவினர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 51செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/7530 | பிறப்பு : 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் சூரிசெவ்4இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BScஅரசதொழில்<br>தொ.இ: G/7542 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 28<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/7531 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 59 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7546 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 72செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSCIT, SLTIT/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7533 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/7552 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L மலேசியா<br>தொ.இ: B/7536 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 9<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7558 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருக்குநேர் மோதிய கனரக வாகனங்கள் இருவர் படுகாயம்; வாகன சாரதி கைது!



(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பரந்தன் - முல்லைத்தீவு (ஏ - 32) வீதியில் உள்ள கண்டாவளை வெளிக்கண்டல் பாலத்தில் இரண்டு கனரக வாகனங்கள் நேரெதிராக மோதிய விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் வெளிக்கண்டல் பாலத்தில் பயணித்த போது மழை நீர் காரணமாக டிப்பர் வாகனத்தின் சக்கரம் சறுக்கியதன் காரணமாக எதிராக முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனத்துடன் பாலத்திற்கருகில் நேரெதிராக மோதிக் கொண்ட போதே விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக தருமபுரம் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவ் விபத்தில் கனரக வாகனத்தின் சாரதியும் டிப்பர் வாகனத்தின் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் டிப்பர் வாகனத்தின் சாரதியை சந்தேகத்தின் பொருட்டு கைது செய்ததோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-15-312)

# பண்டைய மன்னர் கால படிமங்கள்; புதையல் எடுக்க முற்பட்டவர்கள் கைது!

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தேறாங்கண்டல் கிராம காட்டுப் பகுதியில் புதையுண்ட நிலையில் உள்ள பண்டைய மன்னர் கால படிமங்களைத் தோண்டி புதையல் எடுக்க முற்பட்ட 7 பேர் அடங்கிய குழுவை சுற்றி வளைத்த மல்லாவிப் பொலிஸார் 3 பேர் தப்பிச் சென்ற நிலையில் 4 பேரைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில், சந்தேக நபர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 2 இலட்சம் ரூபா தண்டப்பணம் 4 பேருக்கும் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையையும் விடுக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதியினால் இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மல்லாவிப் பொலிஸ் பிரிவிலுள்ள தேறாங்கண்டல் கிராம பகுதியில் வன்னி மண்ணை கடைசியாக அரசாண்ட பண்டார வன்னிய மன்னர் காலத்து கட்டடங்கள் மற்றும் புதை பொருட்கள் புதையுண்டு இருப்பதற்கான படிமங்கள் நிறைய இடங்களில் காணப்படுகின்றன.

இதனை அறிந்து கொண்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த குழுவொன்று உள்ளூர் நபர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி பூசை வழிபாடுகள் செய்த பின்னர் புதையல் தோண்டிய போது, மல்லாவி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சம்பவ இடத்தை சுற்றி வளைத்த போது 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை புதையல் தோண்டிய இடத்தில் இருந்து தப்பிச் சென்ற மிகுதி 3 பேரையும் உடன்டியாக தேடிக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு மல்லாவி பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், குறித்த புதை பொருள் அடங்கிய பகுதியை தொல் பொருள் ஆய்வு திணைக்களத்தின் ஆளுகைக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (5-15)




# வாழ்வாதார உதவித்திட்டங்கள் தொடர்பில் 300 பயனாளிகளுக்கு விசேட கலந்துரையாடல்





(பரந்தன்)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான 2017 ஆண்டுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் பெறும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தலைமையில் A-9 வீதியில் அமைந்துள்ள பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வருடம் 5 மாவட்டங்களிலும் இருந்து ஒரு மாவட்டத்திற்கு 60 பயனாளிகள் வீதம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 300 பயனாளிகளுக்கு தலா 50,000 ரூபா வீதம் அவர்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றும் வகையில் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூலமாக வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு சரியான திட்டத்தினை தெரிவு செய்வது சம்பந்தமாக நேர்முகத் தேர்வுகளும் நடத்தப்பட்டன. (5-15)

# சுயதொழில் பயிற்சிநெறி



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பற்றிக் சாயமிடும் பயிற்சி நெறி கிளிநொச்சியில் அமைந்துள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான தேசிய நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை நேற்று கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபரும் மேற்படி நிலையத்தின் உதவிப்பணிப்பாளருமாகிய த.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெற்றது.

மகளிர் அபிவிருத்தி மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலக ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் சுயதொழில் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பற்றிக்சாயம் இடும் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 5000 ரூபா பெறுமதியான மூலப்பொருட்களும் வழங்கப்பட்டன.

இப்பயிற்சியில் கலந்துகொண்ட பயனாளிகள் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான தேசிய நிலையத்தில் தொடர்ச்சியாக தமது செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் இவர்களுக்குரிய மேலதிக பயிற்சிகளும் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (5-312)

# புகையிரத கடவை பணிக்கு ஊழியரை நியமியுங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை



வவுனியா, நெரிச்சிமோட்டை பகுதியிலுள்ள பாடசாலைக்கு அருகில் இருக்கும் புகையிரதக் கடவைக்கு ஊழியர் இல்லாததனால் புகையிரதக் கடவையை கடந்து செல்லும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியத்திற்குட்படுவதாக தெரிவித்தனர். அருகில் பாடசாலை உள்ளதால் மாணவர்களும் புகையிரதக் கடவையை கடந்தே செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

எனவே முன்னர் அப்பகுதியிலிருந்த தற்காலிக பணியாளர்கள் கடமையிலிருந்து விலகியதையடுத்து சிறிது காலம் அப்பகுதியில் பொலிஸார் கடமையில் இருந்துள்ளனர். தற்போது கடந்த சில தினங்களாக அப்பகுதியிலுள்ள புகை யிரதக்கடவையில் பணிக்கு எவரும் இல்லை.

இதன் காரணமாக புகையிரதக்கடவையைக் கடந்து செல்வதில் அச்சத்தினை எதிர்கொண்டுள்ள அப்பிரதேச மக்கள் அப்புகையிரதக்கடவைக்கு பணியாளர் ஒருவரை நியமிக்குமாறு கோரியுள்ளனர்.

தற்போது புகையிரதக் கடவை பணியாளர் தங்கியிருக்கும் கொட்டில் சரிந்து வீழ்ந்துள்ளது. புகையிரதக்கடவை பாதுகாப்பிற்கு போடப்பட்ட தடைகம்பியும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனை சீரமைத்தும் பணியாளரை நியமித்தும் தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (5-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போத்தல் கள் அடைப்பு நிலைய

# பணியாளர்களின் தங்க நகைகளை அடைவு வைத்து மதுவரி திணைக்களத்திற்கு உற்பத்தி வரி செலுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோணாவில் போத்தல் கள் அடைப்பு நிலையத்தில், இந்த வருடம் 5 இலட்சம் போத்தல் கள் அடைக்கப்பட்டு 15 மில்லியனுக்குமேல் உற்பத்தி வரியாக மதுவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் 15 நாட்களுக்கு ஒரு தடவை இந்த உற்பத்தி வரி செலுத்த வேண்டும். தற்போது வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மக்கள் வங்கியில் குறித்த சங்கத்தின் பெயரில் நிரந்தர வைப்பில் உள்ள 62 மில்லியன் ரூபா நிதிக்கு எதிராக 10 மில்லியன் ரூபா கடன் பெறுவதற்கு விண்ணப்பித்தபோது, கடன் பெற முடியாது.

நிரந்தர வைப்பை முடிவுறுத்தி அதில்இருந்து பணத்தை பெற்று வரிகளைக் கட்டு மாறு வடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூறியதற்கு அமைவாக, சுமார் 75 இலட்சம் ரூபாவுக்கான அனுமதிகள் கிடைக்கப் பெற்று அதனை பெற்று வரிகளைச் செலுத்தியுள்ளதாக பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால், இந்த மாதம் முதலாம் திகதி மது வரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உற்பத்தி வரி ஆகக் குறைந்தது 2 மில்லியன் 05.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். செலுத்த தவறும் பட்சத்தில் மதுவரித் திணைக்களத்தினால் போத்தல் கள் அடைப்பு நிலையம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி கட்டப்படாத தொகைக்கு மூன்று வீத வட்டியுடன் தொடர்ச்சியாக நிதி செலுத்த வேண்டும். இந்த விடயம் சம்பந்தமாக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரிடம் தெரியப்படுத்தியபோது, நிரந்தர வைப்பில் இருந்து நிதியை பெற முடியாது என்றும், அங்கத்தவர்களின் சம்பளத்தை குறைத்துக் கொடுத்து மதுவரித் திணைக்களத்திற்கு வரியை செலுத்துமாறு கூறியிருக்கின்றார். இந்த நிலையில் அங்கத்தவர்கள் நாளாந்தம் இந்த உழைப்பை நம்பியே அவர்களின் ஜீவனோபாயத்தை கொண்டுசெல்கின்றனர்.

எனவே, கோணாவில் போத்தல் கள் அடைப்பு நிலையத்தை பூட்டினால், அங்கத்தவர்கள் நாளாந்தம் அடைப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் சுமார் 4 ஆயிரம் போத்தல் கள்ளும் நிலத்தில் ஊற்றப்படும் அபாயம் ஏற்படும். இதனால், அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலும் தொடர்ந்து அவர்களது உற்பத்தியை நிலத்தில் ஊற்றப்பட்டு பாரிய கடன் சுமையினை அங்கத்தவர்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என கருதி சங்கத்தினுடைய நிதிப்பற்றாக் குறையான நிலையில், பொதுமுகாமையாளர் உட்பட சங்க பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது தங்க நகைகளை ஒவ்வொருவரும் வழங்கி சுமார் 20 பவுண் நிறையுடைய தங்க நகைகளை பொது முகாமையாளரிடம் கையளித்து நேற்று குறித்த நகைகள் கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடைவு வைத்து மதுவரித் திணைக்களத்திற்கு 18 இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருநூற்று பதினெட்டு ரூபா நிதி உற்பத்தி வரியாக செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து கள் அடைப்பினை மேற்கொள்ள நிதி இல்லாமை தொடர்பில் அவசர பணிப்பாளர் சபைக் கூட்டத்தை கூட்டி முடிவெடுக்க நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# பாலைவனமாகும் நந்திக்கடல் முல்லை. மீனவர்கள் கவலை



முல்லைத்தீவு - மாவட்டத்தில் வரட்சியான காலநிலை அதிகரித்துள்ளதால் மாவட்டத்தின் மிகப்பெரிய வாவியாக கருதப்படும் நந்திக்கடல் வற்றி விட்டதாக அப்பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வரட்சி உச்சநிலை அடைந்துள்ளதால் 4,800 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சமாசங்களின் தலைவர் மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நந்திக்கடலில் அதிகமான சேற்று மண் தேங்கி நின்றமையே நீர்வற்றிப் போவதற்கு முக்கிய காரணம் என்று முல்லைத்தீவு கடல் நீரியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நந்திக்கடலை ஆழப்படுத்தி அதிகமான நீரைத்தேக்கி வைப்பதற்குரிய நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நந்திக்கடல் பகுதியில் நீர் குறைந்த காரணத்தினால் அண்மைக் காலமாக அதிகளவிலான மீன்கள் இறந்துள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (5)

# முள்ளிவாய்க்கால் வீதிகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



இறுதிப்போர் இடம்பெற்ற காலத்தில் முழுமையாக இலட்சக்கணக்கான மக்களின் பாவனையிலிருந்த வீதியின் குறிப்பிட்டளவு தூரம் ரூபாய் பத்து மில்லியன் ஒதுக்கீட்டில் செப்பனிடப்படுவதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் மேற்கு இரட்டைவாய்க்கால், மாத்தளன்,சாலை வீதியை இறுதிப்போரின்போது இலட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்தினார்கள். தற்போது குன்றும் குழியுமாக பாவிக்க முடியாமலும்எதுவித பேருந்து சேவைகளுமின்றி தனித்து விடப்பட்டவர்களாக இங்குள்ள மக்கள் காணப்படுகின்றார்கள்.

இந்த வீதியின் நீளம் 13.69கிலோ மீற்றர் தூரமாகும். முள்ளிவாய்க்கால் மேற்கு வலைஞன்மடம் மற்றும் அம்பலவன்பொக்கணை, மாத்தளன், இரணைப்பாலை மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் இந்த வீதியைப் பாவிக்கின்றார்கள். இதனுடைய முழுமையான திருத்தம் தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து விட்டோம். கடந்த முறை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் விசேட திட்டத்தின் கீழ் இந்த வீதியும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

பின்பு இந்த வீதியை நிறுத்தி விட்டார்கள். இது விடயமாக மக்களின் வேதனைகளை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் சுட்டிக் காட்டியிருந்தோம். இன்று வரை பயன்கிடைக்கவில்லை.

மாகாணசபை உறுப்பினர் ஒருவர் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வீதி திருத்தத்துக்கு இம்முறை ரூபா ஐந்து மில்லியன் ஒதுக்கீட்டுக்கு சிபார்சு செய்யலாம். அதற்கமைய இவ்வீதியின் புனரமைப்புக்காக நானும் வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனும் ரூபாய் பத்து மில்லி யன் ஒதுக்கியுள்ளோம்.

தற்போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இவ்வீதி செப்பனிடப்படுகின்றது. மக்களின் அழைப்பை கடந்த முதலாம் திகதி பிற்பகல் அங்கு சென்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருத்த வேலைகளைப் பார்வையிட்டேன். பகுதி பகுதியாக என்றாலும் இவ்வேலைகளை செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கி விடைபெற்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (5)

# வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினால் உதவி

(முல்லைத்தீவு)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்வாதாரம் மற்றும் மருத்துவ உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற புன்னைநீராவியடி விசுவமடுவை முக வரியாக கொண்ட சிவஞானம் மயூரன் என்ற முன்னாள் போராளிக்கு அவரின் வாழ்வதாரத்தை உறுதிப்படுத்தும் முகமாக ரூபா 40000 பெறுமதியான 100 கோழிகள் மற்றும் பராமரிப்பு தொகையும் கண்ணகிநகர் புன்னை நீராவியடியை முகவரியாக கொண்ட கடந்த கால யுத்தத்தின் போது அங்கவீனமான உதயகுமார் யோகராணி குடும்பத்திற்கு மகளின் மருத்துவ செலவிற்காக ரூபா 30000 வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (5)

# அபிவிருத்திக் குழுக்கூட்டம்

முல்லைத்தீவு அபிவிருத்திக் குழுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இணைத் தலைவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் முக்கியமான பிரச்சினைகள், காணிப் பிரச்சினை தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறன்றது. (5-28)

## 33 வருடங்களின் பின்னர்

# வாவெட்டி ஈஸ்வர பெருமானுக்கு விசேட பூஜை வழிபாடுகள்

(பனிக்கன்குளம்)

வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புடைய வாவெட்டிமலையில் அமைந்திருக்கின்ற வாவெட்டி ஈஸ்வர பெருமானுக்கு நேற்று ஆலய பரிபாலன சபை உள்ளிட்ட மக்களால் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1984 ஆம் ஆண்டிற்கு பின்னர் யுத்த சூழ்நிலை காரணமாக ஆலயத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால் இவ்வருடம் வனவள பாதுகாப்பு பிரிவு , பொலிஸார் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவு அதிகாரிகளோடு கலந்துரையாடி தீர்க்கமான முடிவின் பின்னர் அனைவரையும் அழைத்து சென்று நேற்றைய தினம் வாவெட்டி ஈஸ்வர பெருமானுக்குரிய வழிபாடுகளை ஆலய பரிபாலன சபையினரும் மக்களும் இணைந்து மேற்கொண்டனர். (5)

# அரியவகை நீர் நாய் பரிதாபமாக மரணம்



வவுனியா - ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்திற்குள் இருந்து மீட்கப்பட்ட நீர்நாய் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குறித்த நீர் நாய் நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் இருந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

நீர்நாய் மீட்கப்பட்ட போது அதன் கழுத்துப் பகுதியில் வளர்ப்பு நாய் ஒன்று கடித்த காயம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதற்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளனர்; மைத்திரி அரசை கவிழ்த்தே ஆகவேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



புலிகள் மெல்ல மெல்ல தலைதூக்கத் தொடங்கியுள்ளதாகவும் மைத்திரிக்கு வாக்களித்த மக்கள் இதை உணரப்போகின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனை கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்.

தாமதிக்காமல் உடனே மைத்திரி அரசைக் கவிழ்க்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது.

புதிய அரசமைப்பின் ஊடாக சமஷ்டி, எட்கா ஒப்பந்தம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் தாமதிக்காமல் உடனே மைத்திரி அரசைக் கவிழ்க்க வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையைக் காப்பாற்ற முடியாது எனவும் கூறியுள்ளார்.

எமது நாட்டிலுள்ள தொழிலாளர்கள், வர்த்தகர்கள், சிறுபான்மை இன மக்கள் மற்றும் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி மைத்திரிக்கு வாக்களித்தோர் என எல்லோரும் இன்று குழப்பத்திலும் கவலையிலும் உள்ளனர்.

இந்த நாடு புதிய வழியில் பயணிக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். எமது ஆட்சியில் பல விடயங்களைச் செய்தோம்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பலமான அடித்தளத்தை இட்டோம். சர்வதேச கடன் சுமை குறைந்தது. ஒற்றையாட்சி பலப்படுத்தப்பட்டது. பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டி சர்வதேசத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தோம்.

சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதும் கூட அவற்றையும் தாண்டி நாம் இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தினோம். அதைவிடவும் விரிவான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

தியாகமிக்க, முன்னுதாரணமிக்க, உணர்வுமிக்க தலைமைத்துவத்தின் தேவையை மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஆனால், மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த அரசு பயணிக்கின்றது. புதிய அரசமைப்பின் ஊடாக சமஷ்டி கொடுக்கப்படுவதற்கு முன் எட்கா ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன் இந்த அரசு கவிழ்க்கப்படவேண்டும்.

இல்லாவிட்டால் போனதைத் திரும்பப் பெறமுடியாமல் போய்விடும். அரசின் மோசமான பயணத்தை நிறுத்துவதற்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்குத் தேவையாக இருப்பது மீண்டும் தலைதூக்குவதற்குச் சாதகமான ஒரு யுகம். அதற்குத் தேவை மைத்திரி ஆட்சி என்று அப்போது நாம் கூறிய போது மக்கள் நம்பவில்லை.

சர்வதேசசதி என்று கூறிய போது அதைக் கேலியுடன் பார்த்தனர். நாம் அப்போது கூறியவை எல்லாம் இப்போது உண்மையாகிக் கொண்டு போகின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-7)

# மலையகத்திற்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

உத்தேச அரசியல் அமைப்புத் திருத்தங்களின் ஊடாக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என கோரியுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பதற்கும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கும் ஆதரவளிக்கப்படும் எனவும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார் என கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சபை அமர்வுகளிலா? அல்லது வேறு சந்தர்ப்பத்திலா? இவ்வாறு முத்து சிவலிங்கம் கோரினார் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, அரசியல் அமைப்புச்சபையின் இணைக் குழுவிற்கு நான்கு சிறு கட்சிகள் தங்களது யோசனைத் திட்டங்களை முன்வைத்துள்ளன.

ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இவ்வாறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. (இ-7)

# மகிந்தவுடன் தமிழ் கூட்டமைப்பு பேசியிருந்தால் தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைத்திருக்கும்

## நாமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மகிந்தவுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்த போது சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தவுடன் பேசியிருந்தால் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று கிடைத்திருக்கும்.

அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை போலியாக அணுகியதால் தான் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய கூட்டமைப்பின் ஊடாக நாம் தமிழ், முஸ்லிம் மக்களின் உள்ளங்களை வெல்வதற்கு அவர்களை எம் பக்கம் வளைத்துப் போடுவதற்கு விசேட வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம்.



வடக்கு, கிழக்கில் இளம் தலைவர்களை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அவ்வாறானவர்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். எதிர்காலத்தில் அவர்கள் யார் என்று சொல்வோம்.

எமக்கு சில அரசியல் தலைவர்களுடன் மாத்திரம் தான் பிரச்சினை உண்டு. அவர்கள் எமது கொள்கைகளுடன் ஒத்துப்போக மறுக்கின்றனர்.

உதாரணத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எமது ஆட்சியில் மிக இலகுவாக வந்து மகிந்தவுடன் பேசும் வாய்ப்பிருந்தது.

தமிழர்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பிருந்தது. தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை.

அப்படி இருந்திருந்தால் மகிந்தவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றில் இருந்த போது சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்த போது மகிந்தவுடன் பேசி தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றிருப்பார்கள்.

ஆனால், அவர்கள் மகிந்தவிடம் பேச வரவில்லை. அவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக குரல்கொடுப்பதாகக் கூறினாலும் உண்மையில் அவர்கள் அப்படி இல்லை.

அவர்களின் அரசியல் இருப்புக்காகவே இவ்வாறு செய்கின்றனர். வாகனத்தையும் சலுகைகளையும் கொடுத்தால் அமைதியாகி விடுகின்றனர்.

அவர்கள் நேர்மையானவர்கள் அல்லர். இவ்வாறில்லாது தமது இனத்துக்காக உண்மையாகவே குரல் கொடுக்கின்ற இனவாதமற்ற நாட்டுப்பற்றுள்ள இளம் தலைவர்களை நாம் வடக்கு, கிழக்கில் உருவாக்கவுள்ளோம். இதற்கான வேலைத் திட்டம் தற்போது நடை முறைப்படுத்தப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நயினை நாகபூஷணிக்கு இன்று பன்னிரண்டாம் திருவிழா



### நாக அர்ச்சனை செய்த நாகபூஷணியே!

ஜலம் புடைசூழ- நயினை என்னும்
தீவு தனில் வீற்றிருக்கும் தாயே!

சிலம்பிட்ட உன் திருப்பாதம்தனை
தேடி ஓடி வரும் பக்த அடியாரினை தாயே!

பலம் கொண்ட உன்- திருக்கரங்கள்
கொண்டு வாரி அணைத்து அருள்புரிவாய்தாயே!

கலம் கொண்டேறி உன் திருவடி காண வருபவரை
ஜலத்திடை நின்று காத்தருள்வாய் தாயே!

நாகமே அர்ச்சனை செய்த-நயினைநகர்
நாக கன்னிகையே எம் தாயே!

தவலிங்கம் லோகிதா
தும்பளை, பருத்தித்துறை

### அருள் மழை பொழிந்திடாயோ?



அலைகடல் நடுவிலிருந்து
அருள்மழை பொழிகின்ற
அமுதசுர நாயகியே-எமக்கு
அமைதி தர வாராயோ?

பார் போற்றும் பார்வதியே
பலர் நெஞ்சின் நாயகியே
பாரில் நாம் படும் பாட்டில்-உன்
பாராமுகம் ஏனம்மா?

ஆயிரம் கண்ணுனக்கு..
ஆயிரம் கரமுனக்கு...
அடியவர் துயர் துடைத்து
அணைத்திட வாராயோ நீ...

பாதார விந்தமதை
பணிந்து நிற்கும்
பக்தர் நாமும்
படும் பாட்டைத் தீர்த்து-நல்
பாதைதனைக் காட்டிடம்மா...



*செல்வன் வேந்தன் சுபாணன்,*
*யாழ். அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை*

### தாயே நாகபூஷணி

சிரிக்க வேண்டும் தாயே நாம் சிரித்து வாழ வேண்டும்
தாயே வாழும் போதும் சிரிக்க வேண்டும் போகும் போதும்
சிரிக்க வேண்டும் தாயே மனம் திறந்து வாய் திறந்து மலர் போல்
சிரிக்க வேண்டும் மனம் திறந்து சிரித்து விட்டால் கவலை
பறந்தோடும் அதற்கு உன் திருவருள் என்றும் வேண்டும் தாயே
சிரிக்க சிரிக்க சிரிப்பு வரும் கவலை வராது உன்னை நாடித் தேடி
ஓடிவந்து தரிசித்தால் கிடைக்கும் சுகம் வேறுண்டோ
நாம் பட்ட துயர் படும் துயர் போதும் அம்மா போதும்
கடைக்கண்ணால் பார்த்தருள்வாய் தாயே
நாகம் அது பூசிக்க அணைத்து வைத்து இருக்கின்றாய்
எம்மையும் அணைத்து திருவருள் பாலித்து சிரித்து
வாழவை அம்மா தாயே நாகபூஷணி

*திருமுருகன்*
*நீர்வேலி*

### நாகபூஷணி அம்மன் பாமாலை

ஆதியானவள் அன்னை அந்தமானவள்
ஜோதியானவள் தேவி இருளுமானவள்
கோர நாகம் தனில் வீற்றிருப்பவள்
செம்பட்டு ஆபரணங்கள் தரித்தவள்
அணுவுமானவள் அம்மை அண்டமானவள்
மும்மூர்த்திகள் துதிக்க வீற்றிருப்பவள்
வாணி லஷ்மி சாமரை வீசிட
நயினைப்பதியிலே உலகாளும் ஸ்ரீ நாகபூஷணி

த.அபிநாத்
9B
யா/இ/க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை நெருக்கடி; நாடாளுமன்றில் கடும் விவாதம்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள கழிவகற்றல் நெருக்கடி தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்புவதற்கு ஒன்றிணைந்த எதிரணி முயன்ற நிலையில் அங்கு கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

குப்பைகளை அகற்றும் பணி, தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், வீதிகளில் குப்பைகள் குவிவதாக ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

"கைத்தொழில் கழிவுகளையும் குப்பைகளையும் சேகரித்தலும் திருப்திகரமானதாக இல்லை. வீதியோரங்களில் குவியும் குப்பைகள், தாங்க முடியாத நாற்றத்தைத் தருகின்றன" என்று தெரிவித்த அவர், கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளில் குப்பைகளோடு மனித உடற்பாகங்களும் காணப்பட்டன என்று தெரிவித்தார்.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு குறுகிய, தூர நோக்கத்தில் அரசாங்கத்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் கேள்வியெழுப்பினார்.

இதன்போது எழுந்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, குப்பைகளுக்கு மத்தியில் உடற்பாகங்கள் காணப்பட்டன என்ற குற்றச்சாட்டை மறுத்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சூழலுக்கு நேயமான, குப்பைகளைக் கொட்டும் இடங்களை விருத்தி செய்யுமாறு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அத்தோடு, மீள்சுழற்சி செய்யும் ஆலைகள், தனியார் - அரச இணைப்பில் உருவாக்கப்படுமெனவும், குப்பைகளை மக்கச் செய்யும் மூன்று ஆலைகள் முத்துராஜவெலவில் உருவாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் காணப்படும் குப்பைப் பிரச்சினை தொடர்பாக எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், கேள்விகளை எழுப்புவதற்கு முயன்ற போதிலும், நிலையியற் கட்டளை 23 (2)இல் கீழ் எழுப்பப்பட்ட கேள்வி, உப கேள்விகளை எழுப்ப முடியாது என அமைச்சரால் தடுக்கப்பட்ட போது கடுமையான விவாதம் ஏற்பட்டிருந்தது. (இ-7)

# புகையிலைக்குத் தடை என்றால் மாற்றுப் பயிர்ச்செய்கை என்ன? டக்ளஸ் எம்.பி. கேள்வி



"புகையிலைச் செய்கை தடை செய்யப்படுகின்ற நிலையில், புகையிலைச் செய்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கைகள் என்ற வகையில் என்னென்ன பயிர்ச் செய்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, இல்லையேல் அறிமுகப்படுத்தப்படவுள்ளன" என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளையின் கீழ், நேற்று முன்தினம் அறிக்கையொன்றை விடுத்து கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் சுமார் 400 ஆண்டு காலத்துக்கும் அதிகமான காலமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புகையிலைச் செய்கையானது, அச்செய்கையில் ஈடுபடுகின்ற மக்களுக்கு ஒரு பணப் பயிர் என்ற வகையில் பொருளாதார ரீதியில் பாரியளவிலான நலன்களை ஈட்டிக் கொடுத்து வருகிறது.

"எனினும், 2020ஆம் ஆண்டுக்குள் புகையிலைச் செய்கை முற்றாகத் தடை செய்யப்படும் என உலக சுகாதார ஒன்றியத்திடம் இலங்கை .உறுதியளித்துள்ள நிலையில், மேற்படி புகையிலைச் செய்கையை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டு அதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பெறுகின்ற மக்களுக்கு மாற்று பயிர்ச் செய்கைகளை அறிமுகப் படுத்தி அதனை ஊக்கு விக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

"வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகையிலைச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவில் இப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

"அந்த வகையில், இம்முறை யாழ்ப்பாணத்தில் 741.615 ஹெக்டேயர் நிலப் பரப்பில் 1,956 விவசாயிகள் மேற்படி புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

அதாவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 27, 952 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், சுமார் 3,035 குடும்பங்கள் மேற்படி புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இது மொத்த விவசாய செய்கையாளர்களில் நூற்றுக்கு 10.87 வீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைவிட இப் பயிர்ச் செய்கையில் தங்கியிருப்போரது எண்ணிக்கையும் பாரியதாகவுள்ளது.

"தற்போது, யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மிளகாய் மற்றும் வெங்காயச் செய்கைகள் ஒப்பீட்டளவில் புகையிலைச் செய்கைக்கு அடுத்தபடியாக பொருளாதார ரீதியில் சாதகமான நிலையினைத் தருவதாக கூறப்படுகின்ற நிலையில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற விவசாயிகளுக்கான மாற்றுப் பயிர்ச் செய்கை என்ற வகையில் வெங்காயம் மற்றும் மிளகாய் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்காக மானியங்கள், ஊக்குவிப்புக்கள் மற்றும் ஏனைய வசதி கள் செய்து கொடுக்கப்ப டுமா?" எனவும் வினவினார். (இ-7)

## டொலர் நோட்டுக்கள் அச்சடித்த மூவர் கைது

போலி டொலர் நோட்டுக்களை அச்சடித்த மூவரை தியத்தலாவை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், போலி டொலர் நோட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் தியத்தலாவையில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தியத்தலாவை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து விரைந்த பொலிஸார் குறிப்பிட்ட வீட்டினை சுற்றி வளைத்த போது போலி டொலர் நோட்டுக்கள் அச்சடித்துக் கொண்டிருந்த நிலையிலேயே குறித்த நபர்களை கைது செய்துள்ளனர். அத்துடன் அச்சடித்து வைக்கப்பட்டிருந்த 5200 போலி டொலர் நோட்டுக்கள் மற்றும் அந் நோட்டுக்களை அச்சடித்த கணனி இயந்திரத் தொகுதிகள், வர்ணாங்கள் அடைக்கப்பட்ட போத்தல்கள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

# தாஜுடீனின் பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரியை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் ஆனந்த சமரசேகரவை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலமொன்றின் பிரேத பரிசோதனை அறிக்கையை கடந்த ஆறு ஆண்டுகளாக நீதிமன்றில் சமர்ப்பிக்கத் தவறியதாக ஆனந்த சமரசேகர மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே டாக்டர் ஆனந்த சமரசேகரவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் புத்திக ஸ்ரீ ராகல பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் மரணத்தின் போதும் டாக்டர் ஆனந்த சமரசேகரவே பிரேத பரிசோதனை நடத்தியிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலான தகவல்களை உரிய முறையில் வழங்கத் தவறியதாகவும் ஆனந்த சமரசேகர மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வாகன விபத்தில் சடலமாக மீட்கப்பட்ட வசீம் தாஜுடீனின் சில உடற் பாகங்கள் காணாமற் போன சம்பவம் தொடர்பில் டாக்டர் ஆனந்த சமரசேகர மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேச்சுவார்த்தை காரணமாக போராட்டம் பிற்போடப்பட்டது

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகத்துக்கு (சைட்டம்) எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இடம்பெறவிருந்த போராட்டத்தை பிற்போட்டமைக்கு முக்கிய காரணம், அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுடன் இடம்பெற்ற இணக்கமான பேச்சுவார்த்தை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார்

மேலும், மதத் தலைவரின் கோரிக்கையையும் கருத்தில் கொண்டே தீர்மானத்தை எடுத்துள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பயன்படுத்தாத கட்டடத்துக்கு ரூ.500 மில்லியன் கொடுத்த அரசு

(கொழும்பு)

விவசாய அமைச்சின் பயன்பாட்டுக்கென 2016 ஆம் ஆண்டில் கட்டடமொன்றைக் குத்தகைக்கு எடுத்த அரசாங்கம், அதற்காக 500 மில்லியன் ரூபாய் முன்பணத்தைச் செலுத்தியுள்ள போதிலும் இது வரை அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்தவில்லையென அரசாங்கம் நேற்று முன்தினம் ஒப்புக் கொண்டது.

நாடாளுமன்றத்தில்வைத்து, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவால் எழுப்பப்பட்ட வாய்மூலக் கேள்விக்கு விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிதானவால் சமர்ப்பிக்கப்பட்ட பதிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

குறித்த அலுவலகம் பொருத்தமான முறையில் இன்னமும் வடிவமைக்கப்படாத நிலையில் அமைச்சு அக்கட்டடத்துக்கு இன்னமும் செல்லவில்லை என்று இதன்போது கூறப்பட்டது.

மாதாந்த வாடகையாக 15.07 மில்லியன் ரூபாயும் சேவைக் கட்டணமாக 6.1 மில்லியன் ரூபாயும் செலுத்தப்படுவதற்கு அரசாங்கம் சம்மதித்துள்ளது என்று இங்கு மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

இதன்போது பொறுப்பான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வாய் மூலக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு வாய்ப்பாக நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிப்பதில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] (இ-7)

# பொதுபல சேனா குறித்து பிரசன்ன போலிப்பிரசாரம்

## டிலந்த விதானகே குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கம் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க போலிப் பிரசாரம் செய்து வருவதாக பொதுபல சேனா இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் டிலந்த விதானகே குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் பிரான்சிற்கு சென்றிருந்த போது பிரசன்ன ரணதுங்க போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் தோற்கடிக்கச் செய்ய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஞானசார தேரருக்கு பணம் வழங்கியதாக பிரசன்ன ரணதுங்க சுமத்திய குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து பகிரங்க விவாதம் நடத்தத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். -(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகல் நிலையில் வடகொரியா - அமெரிக்கா

**அமெரிக்காவை மிரட்டுகிறது வடகொரியா**

(நியூயோர்க்)

நண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய வடகொரியாவின் ஏவுகணை அமெரிக்காவுக்கான பரிசு என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து எதிரிகளின் இலக்கை குறி வைத்து அழிக்கும். ஏவுகணை மற்றும் ரொக்கெட் எஞ்சின்களை சோதனை செய்யும் வடகொரியா, வடக்கு பியாங்கன் மாகாணத்தில் உள்ள பாங்யான் என்ற இடத்திலிருந்து சுமார் 930 கி.மீ பாய்ந்து சென்று இலக்கை குறிவைத்து தாக்கக்கூடிய ஏவுகணையை நேற்று முன்தினம் காலை வடகொரிய பரிசோதித்தது. கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்ப் உடன் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன், வடகொரியா விவகாரம் தொடர்பான முக்கிய பேச்சு வார்த்தை நடத்தியிருந்த நிலையில், வடகொரியா இந்த ஏவுகணை சோதனையை நடத்தியிருப்பது அமெரிக்கா - தென்கொரியா இடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கண்டம் விட்டு கண்டம் தாண்டி தாக்கக்கூடிய இந்த ஏவுகணை பெரிய, கனமான அணுஆயுதம்என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அந்த ஏவுகணை அமெரிக்காவுக்கு, வடகொரியா அளிக்கும் சுதந்திர தினப் பரிசு என்றும் நேற்று முன்தினம் அனுப்பப்பட்ட இந்த ஏவுகணைப் பரிசு, நிச்சயமாக அமெரிக்கர்களுக்கு சந்தோசத்தை கொடுத்திருக்காது.

மேலும் அமெரிக்கர்களின் அலுப்புக்கு பரிசுகள் அனுப்பப்படும் என்றும் கிம் தெரிவித்தார்.

**பதிலடி கொடுத்த இராணுவ தலைமையகம்**

புதிதாக சோதிக்கப்பட்ட ஏவுகணை அமெரிக்காவுக்கு சுதந்திர தின பரிசு என வடகொரிய ஜனாதிபதி கூறியிருந்த நிலையில், எந்த வகையான மிரட்டலையும் முறியடிக்க தயாராக இருப்பதாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

வடகொரியாவுக்கு பதிலளிக்கும் விதமாக பேட்டியளித்துள்ள அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் டானா ஓயிட், "வடகொரியாவின் வளர்ந்து வரும் அச்சுறுத்தலுக்கு எதிராக எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள திறன்களை முழு அளவில் பயன்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எங்கள் நட்பு நாடுகளான, தென்கொரியா மற்றும் ஜப்பான ஆகியவற்றின் பாதுகாப்பிற்கான எங்கள் உறுதிப்பாட்டில் மாற்றம் இல்லை. எவ்வித அச்சுறுத்தலையும் முறியடிக்க தயாராக இருக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உரசலால் சில மாதங்களாக அமைதி நிலவி வந்த கொரிய தீபகற்பத்தில், தற்போது மீண்டும் போர்ப் பதற்றம் தொற்றிக் கொண்டுள்ளது. (3-8)



# பிரதமர் மோ
# இஸ்ரேல் பய



## தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடவேண்டிய காலமிது

(ஜெருசலேம்)

தீவிரவாதம், வன்முறைக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு போராடவேண்டிய காலம் இது என்று இஸ்ரேல் சென்றுள்ள பிரதமர மோடி கூறியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மூன்றுநாள் அரசுமுறை பயணமாக இஸ்ரேல் சென்றுள்ளார். ஜெருசலேம் விமான நிலையத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு பிரதமர்மோடியை நேரில் வரவேற்றார்.

இதையடுத்து வரவேற்பு நிகழ்ச்சி, டேன்சிகர் பூ பண்ணை, யெட் வாஷம் ஹோலோ காஸ்ட் நினைவிடத்திற்கு சென்றார்.

அதைத் தொடர்ந்து தியோடர் ஹெர்சல் நினைவகத்திற்கு திடீர் வருகை புரிந்தார். பின்னர் இருநாட்டு பிரதமர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, மனிதம் மற்றும் நாகரிக மதிப்பு இருக்கும் ஒவ்வொருவரும் தீவிரவாதம், வன்முறைக்கு எதிராக போராட முன் வர வேண்டும்.

அதற்கான காலம் இது என்று பிரதமர் மோடி தெரிவித் தார். உலகத்தையே உலுக்கிவரும் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க ஒன்றுசேர வேண்டும் என்றார்.

தீவிரவாத தாக்குதலுக்கு உள்ளானதற்கு யெட்வாஷம் ஒரு உதாரணம் எனறும் மோடி கூறினார்.

மேலும் யெட் வாஷம் தாக்குதலில் உயிரிழந்த 6 இலட்சம் யூதர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

மேலும் அந்தத் தாக்குதலுக்கு காரணமான தீவிரவாதத்துக்கு எதிராக போராட வேண்டும். அதற்காக நாம

# முண்டமாக மீட்கப்பட்ட வியட்நாம் மாலுமிகள்



(மணிலா)

அபு சய்யாப் தீவிரவாத குழுவினரால் கடத்தப்பட்ட இரு வியட்நாம் மாலுமிகளின் தலையில்லாத சடலம் பிலிப்பைன்ஸ் கடற்படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் செயற்பட்டு வரும் ஐ.எஸ்.ஆதரவு தீவிரவாத இயக்கமான அபு சய்யாப் குழுவினர், அங்கு வரும் வணிக சரக்குக் கப்பலை கொள்ளையடிப்பது மற்றும் மாலுமிகளை பணயக் கைதிகளாக கடத்துவது போன்ற அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தாண்டு ஜூன் மாதம் பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் சென்று கொண்டிருந்த வியட்நாம் சரக்குக்கப்பலை மடக்கிய அபு சய்யாப் குழுவினர், கப்பலில் இருந்த 6 மாலுமிகளை கடத்திச் சென்றனர். இதில், ஒரே ஒரு மாலுமி மட்டும் கடந்த மாதம் பெரும் போராட்டத்திற்கு பின் மீட்கப்பட்டார்.

இந்நிலையில், பிலிப்பைன்ஸின் தெற்குப்பகுதியில் உள்ள பாசிலன் தீவு கடற்பகுதியில் இரு தலையில்லாத உடல்கள் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியுள்ளன. அங்குள்ள மக்கள் இது குறித்து கடற்படையினரிடம் தெரிவித்துள்ளனர். பின்னர், அந்த இரு உடல்களையும் மீட்ட கடற்படையினர், கடத்தப்பட்ட மாலுமிகளின் உடல்கள்தான் இவை என உறுதிப்படுத்தினர்.

இது தொடர்பான தகவல் தூதரக முறைப்படி வியட்நாம் அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள் ளதாக பிலிப்பைன்ஸ் அரசு கூறியுள்ளது. மூன்று வியட்நாம் மாலுமிகள், 14 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இன்னும் அபு சய்யாப் குழுவினரிடம் பணயக் கைதியாக இருப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது. (3-8)

# வெனிசுலாவில் விமான

## ஒன்பது பேர் மாயம்

(கராகஸ்)

வெனிசுலா நாட்டில் சிறிய ரக விமானமானது அவசரமாக தரையிறங்கும் போது வெடித்துச் சிதறி விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 9 பேரின் நிலை என்னவானது என்று தெரியவில்லை.

வெனிசுலா நாட்டில் ஒன்பது பயணிகளுடன் சென்ற சிறிய ரக ஜெட் விமானமானது இயந்திரக் கோளாறு காரணமாக கடற்பகுதியில் அவசரமாக தரை இறங்க முயற்சித்தது. அப்போது, திடீரென எதிர்பாராத விதமாக விமானம் வெடித்துச் சிதறியது. இந்த விமானத்தில் பயணம் செய்த 9 பேரும் மாயமாகியுள்ள தால், அவர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

மாயமானவர்களை தேடும் பணியில் சுமார் 100 பேர் ஈடுபட்டுள்ளதாக மீட்புக்குழுவினர தெரிவித்துள்ளனர். அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்காக பயன்படுத்தப்படும் இந்த விமானமானது, மார்கரிடா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளது. கடைசியாக நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணிக்கு எஞ்ஜினில் கோளாறு ஏற்பட்டுள்ளது என விமானத்திலிருந்து கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வந்துள்ளது.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் விபரங்கள்



இன்னும் வெளியிடப்படவில்லை. ஆனால் பயணம் செய்தவர்கள் அனைவரும் அரசு அதிகாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

மாடியும்
யணமும்



ஒன்றுபட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

**மோடியிடம் இஸ்ரேல் பிரதமர் பெருமிதம்**

இஸ்ரேல் சென்ற பிரதமர் மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. விமானத்தை விட்டு இறங்கிய மோடியை இஸ்ரேல் பிரதமர் நேதன் யாகு கட்டித் தழுவி வரவேற்றார்.

பின்னர் அவர் பேசுகையில், இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நாள், இந்திய பிரதமருக்காக 70 ஆண்டுகள் காத்திருந்தோம். எனது நண்பரை இங்கு சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

அவரது வரவேற்புக்கு பிரதமர் மோடியும் நன்றி தெரித்தார். எனது இப்பயணத்தின் மூலம் நமது இரு நாடுகளின் சமூகமும், உறவும் வலிமை அடையும். நமது உறவுகளில அந்த வானம் கூட நமக்கு எல்லை இல்லை என்றார்.

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பின போது தொழில்நுட்பத்தில் புதுமைகளை புகுத்தும் திட்டத்துக்காக ரூ. 260 கோடி வழங்கப்படுவதாக இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு அறிவித்தார். (3-8)

## ன விபத்து



எனவும் பயிற்சியில் ஈடுபட்ட போது இவ்விபத்து நடந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-8)

## விவசாய நிலங்கள், குடியிருப்புக்களை விழுங்கியது மழை வெள்ளம்

### நிர்க்கதியான நிலையில் அசாம் மக்கள்

### 7 பேர் பலி!

(கவுகாத்தி)

வடகிழக்கு மாநிலங்களில் பெய்து வரும் தொடர் கனமழையால் அசாம் மாநிலத்தின் பல்வேறு மாவடடங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன.

அசாமில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, பெரும்பாலான இடங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அசாமில் முக்கிய நதியான பிரம்மபுத்திரா, சுபன்ஸ்ரீ உள்ளிட்ட அனைத்து நதிகளிலும் அபாயக் கட்டத்தை தாண்டி வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கிறது.

பல ஊர்களில் வெள் ளம் அபாய கட்டத்தை தாண்டி சென்று கொண்டிருக்கிறது.

மாநிலத்தில் வெள்ளம் பாதிக கப்பட்ட 13 மாவட்டங்களைச் சேர்ந்த 3.8 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் மீட்புப் பணிகள் தீவிரவமாக நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் 834 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 19,000 ஹெக்டர் பரபபளவுள்ள விவசாய நிலங்களை தண்ணீர் சூழ்ந்துள்ளது.



அதிகபட்சமாக கரீம்கஞ்ஜ் மாவட்டத்தில் 2.5 லட்சம் மக்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மாநிலத்தின் ப்ல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் தகவல் தொடர்பு, மின்சாரம் உள்ளிட்ட சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கானோர் வெள்ளப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் நேற்று முன்தினம் ஒருவர் அடித்துச் செல்லப்பட்டதை அடுத்து, வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17ஆக உயர்ந்துள்ளது. (3-8)

## அவசரமாக கூடும் ஐ.நா.

### வடகொரியாவுக்கு புதிய தடைகள் விதிக்கப்படுமா?



(வோஷிங்டன்)

பல்வேறு நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து எதிரிகளின் இலக்கை குறிவைத்து அழிக்கும் ஏவுகணை மற்றும் ரொக்கெட் எஞ்சின்களை சோதனை செய்யும் வடகொரியா, சமீபத்தில் புதிய ஏவுகணை ஒன்றை சோதனை செய்தது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா. சபை பொதுச்செயலாளர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக வடகொரியாவின் தொடர் நடவடிக்கைகள் அமெரிக்காவை கோபத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால், ஐ.நா.பாதுகாப்புச் சபையை உடனே கூட்டி இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தது.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. மேற்கண்ட நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா.தலைவர் அண்டோனியா குற்றேரஸ் இந்த அவசர கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். (3-8)

## இந்திய படைகளை விரட்டி அடிப்போம்

### சீன பத்திரிகை கொக்கரிப்பு

(பீஜிங்)

சிக்கிம் பகுதிக்குள் நுழைந்துள்ள இந்தியப் படைகளை துவம்சம் செய்யும் சக்தி எங்கள் இராணுவத்திடம் உள்ளது என சீன ஊடகம் திமிருடன் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், சிக்கிம் மாநிலம் சீன நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளன.

இருநாட்டு இராணுவ வீரர்களும் எல்லைப்பகுதியில் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவ் விவகாரம் தொடர்பாக சீன அரசு ஊடகம் இந்தியாவை எச்சரிக்கும் தொனியில் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், சீன இராணுவத்திறகு இந்திய படைகளை அடித்து விரட்டும் சக்தி இருப்பதாக நம்புகிறோம்.

சிக்கிமை விட்டு இந்திய படைகள் கண்ணியமாக வெளியேற வேண்டும்.

இல்லையேல், விரட்டி அடிப்போம்" என திமிருடன் தெரிவித்துள்ளது. மேலும், போர் ஏற்பட்டால் 1962ஆம் ஆண்டு பாதிப்பை விட அதிக பாதி ப்பை ஏற்படுத்துவோம் எனவும், பூடானை இந்தியா பலவந்தமாக கீழ் படியச் செய் துள்ளதாகவும், நீண்ட காலமாக அடிமை போன்று நடத்துகிறது என்றும் இது நவீன சர்வதேச உறவுகளில் எங்குமே நடக்காதது.

இந்தியாவின் சட்ட விரோத எல்லை ஊடுருவலை சர்வதேச சட்டம் அனுமதிக்காது என்றும் பூடானை சீன ஊடகம் தூண்டி விட்டுள்ளது. (3-8)

## மண்டையோடுகளாலான கோபுரம் மெக்சிக்கோவில் கண்டுபிடிப்பு



(மெக்சிகோ)

மெக்சிகோ தலைநகரில் பழங்கால அஸ்டெக் கோவில அமைந்துள்ள பகுதியில் ஆய்வாளர்கள் மேற்கொண்ட தேடுதலில் 676 மனித மண்டை ஓடுகளாலான கோபுரம் ஒன்றை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது மாயன் வம்ச கால கட்டத்தில் நரபலி கலாசாரம் இருந்துள்ளதை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளது எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அஸ்டெக் மற்றும் மெசோ அமெரிக்கன் மக்கள் சூரிய கடவுளுக்கு நரபலி அளித்து வந்துள்ளது வரலாற்றாசிரியர்களால் நிறுவப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மண்டை ஓடுகளால் ஆன கோபுரமானது ஸ்பெயின் நாட்டவர்களின ஆக்கிரமிப்பில் இருந்து அப்போதைய குடிமக்களை காக்கும் பொருட்டு குறித்த கோபுரத்தை அமைத்திருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் கண்டெடுக்கப்பட்டுள்ள மண்டை ஓடுகளை ஆய்வ்க்கு உட்படுத்தியதில் ஒரு மண்டை ஓடு மட்டும் ஸ்பானியர் ஒருவரது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மண்டை ஓடு கோபுரம் கண்டெடுக்கப்பட்ட பகுதியை ஆய்வாளர்கள் கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்தே ஆய்வுக்கு உட்படுத்தி வந்துள்ளனர். (3-8)

## உலங்குவானூர்தி மாயம்

(டேராடூன்)

அருணாச்சல பிரதேசத்தில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி திடீரென மாயமானது.

விமானப்படைக்கு சொந்தமான 3 வீரர்களுடன்சென்ற இலகுரகஉலங்குவானூர்தி ஒன்று பாபம் பரே மாவட்டம் சாகலி அருகே சென்றபோது கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பை இழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இதையடுத்து உலங்குவானூர்தியை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்களும் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (3-8)

## உயிருடன் புதைக்கப்பட்ட பச்சிளம் குழந்தை மீட்பு

(போபால்)

மத்திய பிரதேச மாநிலத்தல் உயிருடன் கல்லறையில் புதைக்கப்பட்ட பச்சிளம் குழந்தையின் அழுகுரல் கேட்டு அங்கிருந்தவர்கள் மீட்டுள்ள சம்பவம் நடந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் பர்வானி மாவட்டத்தில் உள்ள குஷ் என்ற கிராமத்தில் இருக்கும் கல்லறை அருகே நேற்று முன்தினம் அங்குள்ள சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது, அங்கு குழந்தையின் அழுகுரல் கேட்டுள்ளது. இதனையடுத்து, அச் சிறுவர்கள் சேர் சிங் என்பவரிடம் இதைத் தெரிவித்தனர்.

இச்செய்தியை அறிந்த சேர்சிங் தன் மனைவியோடு கல்லறைக்கு விரைந்தார். அங்கு, அழுகுரல் கேட் டுள்ள இடத்தை தோண்டி பார்த்த போது பச்சிளம் குழந்தை ஒன்று உயிரோடு புதைக்கப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர், குழியில் இருந்து குழந்தையை மீட்டு அருகில் இருந்த வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்து சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் நடத்திய விசாரணையில் குழந்தையை ஒரு அடி ஆழத்தில் புதைத்ததாக தெரிய வந்தது.

இதையடுத்து, குற்றவாளிகளான குழந்தையின் பெற்றோர்களை பொலிஸார் வலை வீசி தேடி வருகின்றனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோ – சுமந்திரன் கடும் வாக்குவாதம்

## வழிநடத்தல் கூட்டம் இடையில் நிறுத்தம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த அரசியலமைப்பு பேரவையின் வழி நடத்தல் குழுக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் அமைச்சர் மனோகணேசனுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. இந்த வாக்குவாதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு அமைதிப்படுத்திய போதிலும் வழிநடத்தல் குழுவின் கூட்டம் இடையிலேயே நிறுத்தப்பட்டது.



புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே, அரசியலமைப்பு திருத்த முன்மொழிவுக்கு தமிழ்க் கட்சிகளின் இணக்கப்பாடு தொடர்பான விவகாரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும், அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

தமிழ்க் கட்சிகள் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல் அளித்து விட்டதாக, அமைச்சர் மனோகணேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம்சாட்டினார்.

அதனை நிராகரித்த மனோ கணேசன், முன்மொழியப்பட்ட திருத்தங்களை தமிழ்க் கட்சிகள் எதிர்க்கவில்லை என்று கூறுவதில் தவறு இல்லை என்று வாதிட்டார்.

இந்த வாக்குவாதம் நீடித்த போது, இருவரையும் அமைதிப்படுத்த தலையீடு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த விவகாரத்தை கூட்ட அறைக்கு வெளியே கலந்துரையாடி தீர்த்துக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறினார்.

இந்த வாக்குவாதத்தின் விளைவாக, வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் இடையில் நிறுத்தப்பட்டதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# இனவாதத்தைத் தூண்டி குழப்பங்களை ஏற்படுத்த அரசாங்கம் அனுமதிக்காது



## அமைச்சர் ருவான் தெரிவிப்பு

"இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டி, இனங்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்த இந்த நாட்டு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது" என, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல், காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஐ.தே.கவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.எஸ். ஸாபியின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடை பெற்றது.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "இந்த நாட்டில் சில இன ரீதியான குழுக்கள், இனவாதத்தைத் தூண்டி இன மோதலை உருவாக்க முயற்சிக்கின்றன.

"அதற்கு யாரும் துணை போகக் கூடாது என்பதுடன், இந்த நாட்டை இன,மத,மொழி பேதமின்றி அனைவரும் ஒன்றுபட்டு கட்டியெழுப்ப வேண்டும். அதற்காகவே இந்த நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது' என்றார்.

"இந்த நாட்டில் சர்வதேச சக்திகள் குழப்பத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டை குழப்ப நிலைமைக்கு கொண்டு செல்ல முயற்சித்தபோது, இந்த நாட்டில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

"கடந்த 30 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அவ்வகையில், மட்டக்களப்பிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்றார்.

"மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள்களை பிரதமரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு செல்வேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாக்களிக்கும் உரிமையில் நெகிழ்வுப் போக்கு வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

"இடம்பெயர்ந்து, வெளி மாவட்டங்களில் தங்கியிருக்கும் வாக்காளர்கள், தமது சொந்த மாவட்டத்தில் வாக்களிக்கும் உரிமை தொடர்பான விடயத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற, தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், நீதியமைச்சர், தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுடன் மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் பயனாக, நான்கு வருடங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட தற்காலிக ஏற்பாடாக, இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், வேறு மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள், தங்களுடைய சொந்த மாவட்டங்களில், வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், அது நான்கு வருடங்களுக்கு தற்காலிகமானதாகவே உள்ளது.

"ஆகையால், இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தன்னுடைய கடும்போக்கைக் கைவிட்டுவிட்டு, நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பின் வாங்குவது தவறா?

பல விடயங்களில் ஆர்வமாக மூக்கை நுழைக்கிறோம். கொஞ்சத் தூரம் போனதும் தான் "ஐயையோ! செமத்தியாக மாட்டிக் கொண்டோம் போல் இருக்கிறதே! ஜகா வாங்க வேண் டியது தானா ?" என்ற கலவர நினைப்பு வரும்.

ஆனால் சுற்றியிருப்பவர்கள் நம்மை கேவலமாக பேசுவார்களே என்றும் கேலி செய்வார்களே என்றும் பல நினைப்புகளும் சேர்ந்தே வரும், இவை நம்மைப் பலவீனப் படுத்துவதற்கு பதிலாக பலப்படுத்தி விட்டு போகும்.

அதாவது என்ன ஆனாலும் சரி. ஒரு கை பார்த்து விடுவது என்று இறங்கி முகத்தை பெயர்த்துக் கொள்வார்கள். இது புத்திசாலிகளுக்கு அழகல்ல. எவ்வளவோ விடயங்களில் ஆர்வக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறோம். அவ்வப்போது பிரச்சினை பூதாகரமாக தெரிவதில்லை. இறங்க இறங்க தான் ஆழம் மட்டுப்படுகிறது. சுட்டுப் பொசுக்கிய பின்பு தான் அதன் சூடு புரிகிறது. இது பின்வாங்க வேண்டிய தருணம்.

அதற்காக எந்த விடயத்தில் தடங்கல் வந்தாலும் உடனே உதறி விட்டு ஓடி விட வேண்டும் என்கிற கட்சிக்கு நான் ஆள் சேர்க்கிறேன் என்று எவரும் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம்.

கடைசி வரை போராடுவது என்பது தான் என் கட்சி. ஆனால் நம்பிக்கையின் ஒளி கொஞ்சம் கூடத் தெரியாத பிரச்சினை எனும் மலைமுகட்டில் போலியான கௌரவத்திற்காகவும் யார்என்ன நினைப்பார்களோ என்ற அர்த்தமற்ற வாதத்திற்காகவும், நடந்து நடந்து அதல பாதாளத்தில் விழுந்து விடக்கூடாது.

சொல்லியும் கேட்காமல் சுயமாகவும் புரியாமல் எனக்கு நானே குழி தோண்டிக் கொள்கிறேன் என்கிற வறட்டுத்தனத்துக்கு நாம் ஒருபோதும் விலை போய் விடக் கூடாது.

இடையில் பின்வாங்கினால் அவமான மாச்சே என்று தயங்குகிறவர்கள், முழுப் பாதையையும் கடந்த பிறகு பின் வாங்குவது அதை விடப் பெரிய அவமானம் என்பதை உணர்வது நல்லது.

" தவறு என்பதை உணர்ந்தேன்; பின் வாங்கி விட்டேன்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டால் "அடப் பரவாயில்லையே. இவன் புத்திசாலி!" என்று சமூகம் நம்மை மன்னிக்கும்.

இன்னும் தெளிவுபடச் சொல்ல வேண்டுமானால் பாதித்தவறைச் செய்து உணர்ந்து திருந்தியவனை மன்னிக்க உலகம் தயாராக இருக்கிறது.

ஆனால் முழுத்தவறைச் செய்து விட்டால் சாமானியத்தில் மறக்காது; மன்னிக்கவும் செய்யாது.

அவர் சொன்னார் பின்வாங்கினேன் என்று சொல்லியும், எவர் தலை மீதேனும் தேடிப் பழியைப் போட்டு தப்பிக்கலாம். தவறேதுமில்லை.

நிச்சயமாக தவறு என்று தெரிந்து விட்ட பிறகு எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் சரி – பின் வாங்குவதில் தவறேயில்லை!

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.க.தொழிற்சங்கம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

### ஜனாதிபதி பெருமிதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்கம் இந்த நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதில் பங்களிப்பு செய்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரலாற்று காலத்திலிருந்தே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், கட்சியின் தொழிற்சங்கமும் ஒரே பாதையில் பயணித்த மனிதநேய இயக்கமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நிறுவப்பட்ட தொழிற்சங்க சம்மேளனத்தின் புதிய அலுவலகத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் ஜனாதிபதி இந்த விடயத்தைக் தெரிவித்தார்.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து, புதிய அலுவலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி விசேட விருந்தினர்கள் பதிவேட்டிலும் நினைவுக் குறிப்பினை பதிவு செய்தார். (இ-7)

# சைட்டம் குறித்து ஆளும் கட்சிக்குள் பொதுவான இணக்கப்பாடு வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து



மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) தொடர்பில் ஆளும் கட்சிக்குள் பொதுவான இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் தெரிவித்துள்ளார். மாறாக ஒவ்வொரு அமைச்சர்களும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிடக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் இந்த விடயம் குறித்து பேசப்பட்ட போது சில அமைச்சர்கள் மாறுபட்ட நிலைப்பாடுகளை வெளியிட்டிருந்தனர். அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க, எஸ்.பி. திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்கள் பல்வேறு கருத்துக்களை முன் வைத்திருந்தனர்.

இதன் போது பொதுவான அடிப்படையில் ஆளும் கட்சிக்குள் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (இ-7)




யாழ். யோகா உலகம் நடத்திய சர்வதேச மூன்றாவது யோகாதின விழாவும் பிரணாயாமமும் குண்டலினியும் எனும் நூல் வெளியீடும் இணைந்த இரு நிகழ்வுகள் அண்மையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றன. யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கு.மிகுந்தன், பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி வியன் சத்தியசீலன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலாநிதி திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## கொழும்பில் உள்ள குப்பைகளை 3தினங்களுக்குள் அகற்றாவிடின் அதிகாரிகளை பதவி நீக்க முடிவு



கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் குவிந்துள்ள குப்பைகள் அனைத்தும் எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க மாநகர மற்றும் நகர சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த தவறும் பட்சத்தில் பாராளுமன்ற அனுமதி பெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவ்வதிகாரிகள் பதவி நீக்கப்படுவர் எனவும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு நகரத்தில் எழுந்துள்ள குப்பைப் பிரச்சினைக்கு உடனடி தீர்வினை முன் வைக்கும் நோக்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேல்மாகாணத்திற்கு பொறுப்பான மாநகரசபை மற்றும் நகர சபை அதிகாரிகளுடன் விசேட சந்திப்பொன்று கொழும்பு மாநகரசபை கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார். (இ-7)

## அரசியல் பிளவால் கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

### சு.க.செயலாளர் கவலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் அரசியல் ரீதியான பிளவு காரணமாக கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களே அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எப்பாவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காரணமாக சுதந்திரக் கட்சியினர் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்து விட்டு தற்போது அதனை கொண்டுநடத்த விடாமல் இடையூறுகளை ஏற்படுத்தி கட்சியை பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இதன் காரணமாக கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் பெரும்பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர் என வும் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## சீனாவில் ஐ.தே.க.உறுப்பினர்கள்



(பீஜிங்)

சீனாவின் சர்வதேச திணைக்களத்தின் மத்திய குழுவின் அழைப்பிற்கு அமைவாக ஐக்கிதேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர் ஹசீம் உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சி பிரதிநிதிகள் சீனாவிற்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சிபீசி மத்திய குழுவின் நிலையக்கட்டளை உறுப்பினர் Huang Lixin மற்றும் சிபீசி ஜங்சு மாகாணக்குழு உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்தனர். இந்த சந்திப்பில் அந்த மாகாணத்தின் துணை ஆளுநரும் கலந்துகொண்டார். (இ-7)

# இஸ்லாமிய தீவிரவாத இராச்சியத்தின் வரைபடத்தில் இலங்கையும் உள்ளடக்கம்

## பொதுபலசேனா சுட்டிக்காட்டு

இஸ்லாமிய தீவிரவாத அமைப்பாக செயற்படுகின்ற ஐ.எஸ். அமைப்பினர் உருவாக்கியுள்ள இஸ்லாமிய இராச்சியத்தின் வரைபடத்தில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்காலத்தில் 30 இற்கு மேற்பட்ட இலங்கை இஸ்லாமியர்கள் குறித்த அமைப்புடன் தொடர்புகளை பேணி வருகின்றனர்.

எனவே இது குறித்து சங்க சபைகள் இணைந்து விசேட [illegible] வெளியிடும் என அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்று [illegible] அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மதுபோதையில் வந்த நபர் மோ.சைக்கிளுக்கு தீவைப்பு

மது போதையில் வீட்டிற்கு வந்த பூசகர் ஒருவர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டதுடன் தனது மோட்டார் சைக்கிளையும் தீக்கிரையாக்கிய சம்பவம் துன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மேற்படி பகுதியிலுள்ள பூசகர் மதுபோதையில் வந்து மனைவியுடன் தகராறில் ஈடுபட்டு விட்டு வீட்டு முற்றத்தில் நிறுத்தியிருந்த தனது மோட்டார் சைக்கிளின் பெற்றோல் வயரினை பிடித்து இழுத்துவிட்டு தீயை மூட்டியுள்ளார். இதனால் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்துள்ளது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அப்பூசகரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்.இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை

## புதிய இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை இராணுவம் எந்தவொரு விசாரணைக்கும் தயாராக உள்ளது. அது போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என புதிய இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 22ஆவது இராணுவத் தளபதியாக, இராணுவத் தலைமையகத்தில் பொறுப்பேற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவத்துக்கு தண்டனைச் சட்டம், இராணுவச் சட்டம் என இரண்டு சட்ட விதிமுறைகள் காணப்படுகின்றன. இவைகளுக்கு உட்பட்டே தமது கடமைகளை அது புரிகின்றது.

"ஆதலால், இராணுவம் தவறு செய்வதற்கு வாய்ப்பு இல்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பதற்றம், அழிவை விரும்புவதாக

# தொலைக்காட்சி ஊடகங்கள் மீது ஜனாதிபதி மைத்திரி கடும் விசனம்



நாட்டில் உண்மையாக நடக்கும் நிகழ்வுகளுக்கு முற்றிலும் மாறான விடயங்களை மக்களுக்கு கொடுத்து, நாளை என்ன நடக்கப் போகின்றது என்ற தவறான ஊகங்களை தொலைக்காட்சிகள் ஏற்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையாக விமர்சித்துள்ளார்.

இரத்தினபுரியில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட சிறுவர் நோயாளர் விடுதியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மாலை வேளைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பவர்களுக்கு, நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லையென்ற எண்ணமே உருவாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தளவுக்கு சகல விடயங்களையும்தொலைக்காட்சிகள் தலைகீழாக சித்திரிக்கின்றன எனத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் முன்னெடுக்கப்படும் சமாதான முன்னெடுப்புகள், அபிவிருத்தி செயற்பாடுகள் என்பவற்றை விடுத்து, மக்களை கவர்வதற்காக எந்த நேரமும் பதற்றமான சூழ்நிலைகளையும் அழிவுகளையும் மாத்திரமே தொலைக்காட்சிகள் ஒளிபரப்பு செய்கின்றன எனவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-7)

# மாநாயக்க தேரர்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு

மாநாயக்க தேரர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திப்பு ஒன்றை நடத்த உள்ளார். மூன்று பீடங்களினதும் மாநாயக்க தேரர்களுடன் ஜனாதிபதி இன்று விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த உள்ளார்.

கண்டி அஸ்கிரிய விஹாரையில் இந்த விசேட சந்திப்பு நடத்தப்படவுள்ளது. உத்தேச அரசியல் சாசனம் மற்றும் மாலபே தனியார் மருத்துவ கல்லூரி விவகாரம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி, மாநாயக்க தேரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக நேற்று முன்தினம் மாநாயக்க தேரர்கள் தங்களுக்கு இடையில் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோத மணல் ஏற்றிய இருவர் பொலிஸில் சரண்!

சட்டவிரோதமாக மணலை ஏற்றிச்சென்றபோதுபொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது தப்பிச் சென்ற இருவரும் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

சில திங்களிற்கு முன்னர் குருடத்தனைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்ட போதும் நிறுத்தாமல் தப்பிச் செல்ல முற்பட்ட போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனையடுத்துஹன்டரில் இருந்த இருவர் தப்பியோடியிருந்த நிலையில் வாகனத்தை பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர். இதில் தப்பியோடிய இருவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை பொலிஸில் சரணடைந்தனர்.(இ-60)

# மனித உடல் அவயவங்கள் எவையும் குப்பைகளுடன் கொட்டப்படவில்லை

## அமைச்சர் பைஸர் மறுப்பு

முத்துராஜவெலவில் குப்பைகளுடன் எந்தவொரு மனித உடல் அவயவங்களும் கொட்டப்படவில்லை. அவ்வாறான குற்றச்சாட்டு அரசியல் இலாபத்திற்காகவே முன்வைக்கப்படுகின்றது என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா நேற்று முன்தினம் சபையில் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 23 இன் கீழ் இரண்டின் படி மேல்மாகாணத்தில் காணப்படும் குப்பைப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு எதிர்க்கட்சி ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் குப்பை பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். ஜனாதிபதி தலைமையில் கழிவகற்றல் முகாமைத்துவம் குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உரிய பொறிமுறைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் குப்பை பிரச்சினையை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர்.

விசேடமாக முத்துராஜவெல பகுதியில் மனித அவயவங்கள் கொட்டப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. அது தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தோம். அவ்வாறான எந்த செயற்பாடுகளும் இடம்பெறவில்லை என்றார். (இ-7)

# அதிரடி நடவடிக்கையில் பிரதமர் கலக்கத்தில் ராஜபக்ஷர்கள்

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடி தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கான வழக்குகள் விரைவுபடுத்தப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளாக அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாரிய நிதி மோடிகளை மேற்கொண்ட ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் தொடர்பில் ஊழல் எதிர்ப்பு குழு மற்றும் நிதி மோசடி விசாரணை பிரிவு இதுவரை எவ்வித வழக்குகளையும் தாக்கல் செய்யவில்லை என நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி முன்வைத்த குற்றச்சாட்டை தொடர்ந்து பிரதமர் இவ்வாறு இணக்கம் வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கூட்டத்தில் ஜனாதிபதி கோபமாக கருத்து வெளியிட்டிருந்ததனை தொடந்து அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி ஆகியோரை மேல் மாடிக்கு அழைத்து சென்று இருவரையும் சமாதானப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய இணக்கப்பாட்டிற்கு வந்த பிரதமர் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் முக்கிய 10 வழக்கு விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய நாமல் ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ஊழல் மோசடி, மிக் விமான கொள்வனவு போன்ற மோசடிகள் தொடர்பில் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

மிக் விமான கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் ராஜபக்ஷர்கள் கலக்கத்திலுள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இந்துஒளி வெளியீடு

மிகப்புராதனமானதும் சக்தி மிக்க ஈழத்து ஆலயங்களில் ஒன்றாகவும் திகழும் நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் ஏவிளம்பி வருட மஹோற்சவத்தை முன்னிட்டு கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீகச் சஞ்சிகையான இந்து ஒளி சிறப்பிதழ் நாளை 7 ஆம் திகதி ஆலயத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நாகபூஷணி அம்பாளின் மகத்துவத்தையும் அம்பாளின் ஆலய வரலாறு, திருத்தேர் அமைக்கப்பெற்ற 60 வருடப் பூர்த்தியை முன்னிட்டு திருத்தேர் பற்றிய விபரங்கள், சக்தி வழிபாடு பற்றிய கட்டுரைகள் மற்றும் ஏனைய பல ஆன்மீகத் தகவல்களையும் உள்ளடக்கியதான இச்சிறப்பிதழானது அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியத்தின் (குகன் மோட்டோர் ஸ்டோர்ஸ்) பூரண அனுசரணையுடன் மலர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆனிப்பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு பெரிய தம்பிரான் ஆலய ஆனிப் பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் 8 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு பூஜைகள் நிறைவுறும். (இ-3)

## அலங்காரத் திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

புலோலி வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது. (இ-3)

# பந்துல குணவர்த்தனவிடம் விசாரணை நடத்த வேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் ரவி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். தேசிய லொத்தர் சபையின் கொவிசெத சீட்டிழுப்பு தொடர்பில் மோசடி இடம்பெற்றுள்ளதாக பந்துல குணவர்த்தன குற்றம் சுமத்தியிருந்தார்.

எனவே இந்த சம்பவம் தொடர்பில் பந்துல குணவர்த்தனவிடம் முதலில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

மோசடி இடம்பெற்றிருந்தால் அது குறித்து பந்துல குணவர்த்தன புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்திருக்க வேண்டும் எனவும் அவ்வாறு இல்லையென்றால், பந்துல குணவர்த்தனவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்த வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.



இந்த விடயம் குறித்து விசாரணை நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# வாகன விபத்தில் சிக்கிய இராணுவ மேஜர் மரணம்

(கொழும்பு)

பன்னல, ஜனஹிதகமதி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியமையினால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்த இருவரில் ஒருவர் இராணுவ மேஜர் என தெரிவிக்கப்படுகின்றது.

யக்வில, போவத்தை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதான மஹேஷ் ரத்நாயக்க என்ற மேஜரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மற்றவர் நாத்தன்டிய பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய மஞ்சுல சம்பத் என்பவராகும்.

பன்னல பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலய வருடாந்த சகஸ்ர (1008) சங்காபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-3)

# 'நீந்திக் கடந்த நெருப்பாறு' அறிமுக நிகழ்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நா. யோகேந்திரநாதனின் பூநகரியில் இருந்து புதுமாத்தளன் வரை நீந்திக் கடந்த நெருப்பாறு (பாகம் - 2) அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

## தடகளப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி இன்று 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் இடம்பெறும். (இ-8)

# 'காலியாக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருக்கும் புலி' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ப.தெய்வீகனின் காலியாக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருக்கும் புலி எனும் நூல் வெளியீட்டுநிகழ்வுநாளை மறுதினம் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

# கணனி வன்பொருள் பயிற்சிநெறி

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இம்மாதம் 17ஆம் திகதி இலவச கணனி வன்பொருள் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பங்கு பெற விரும்புபவர்கள் எதிர்வரும் 12.07.2017இற்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள சிலையத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ள முடியமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1124

Search for people, places and things    Nagendram  Home

அஜன்




சுதாமதி



பேபி



ரவி




மீர்ணாளினி



சர்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

**கோலாட்டம், கும்மி, கரகம், மகுடி, கம்படி, உடுக்கடித்தல் போன்ற பாரம்பரியக் கலைகளில் விற்பன்னரான இவர் 1931.04.01 ஆம் திகதி முள்ளியவளையில் பிறந்தார். 1947 ஆம் ஆண்டு கிராமியக் கலைகளில் கால்பதிக்கலானார். 86 வயதிலும் எந்தவிதச் சோர்வின்றி கோலாட்டம், கும்மி, கரகம், மகுடி, கம்படி ஆகிய கலைகளை பல் பாகங்களிலும் நிகழ்த்தி வருகின்றார். சிறுவயதில் பவளக்கொடி, அல்லி அர்ஜீனா, இவற்றுடன் 50 இற்கு மேற்பட்ட சமூக நாடகங்களில் நடித்த இவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரம்பரிய இக்கலைகளை அழியவிடாது காத்து வருகின்றார். 2013 ஆம் ஆண்டு கலாபூஷண விருதையும் பெற்றார். கலாபூஷணம் இரா.முருகுப்பிள்ளை அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.**

# நான் இருக்கும் வரை ஆடிக்கொண்டேயிருப்பேன்

## கரகம், உடுக்குக்கலை விற்பன்னரான கலாபூஷணம் இராமுப்பிள்ளை முருகுப்பிள்ளை அவர்களுடனான சந்திப்பு

**◆ கலைத்துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

1947 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கலைக்குள் நுழைந்தேன். சிறுவயதிலேயே கரகம், கோலாட்டம், கும்மி, மகுடி, சிலம்பாட்டம் ஆகிய கலைகளில் இயல்பாகவே ஆர்வம் இருந்தது.

ஆனாலும் அதனைப் பயிலுவதற்கோ, ஆற்றுகை செய்வதற்கோ சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்படியே இருந்தால் வாழ்நாள் முழுவதும் சந்தர்ப்பமே கிடைக்காது என உணர்ந்த நான், நானாக கரகத்தை எடுத்து ஆடிப் பழகினேன். ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருந்தது. பின்னாளில் எனது முயற்சி வெற்றியளித்தது.

இதனுடைய முயற்சியின் தொடர்ச்சியாக மகுடி, சிலம்பாட்டம் என்பனவற்றை நானாகவே செய்து செய்து வந்தேன். அவையும் கற்றுக்கொள்ள முடிந்தது.

என்னுடைய அம்மாவின் தந்தையார் வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கலைஞர். அவரைப் பொதுவாகக் கூத்தாடி வேலுப்பிள்ளை என்றே அழைப்பார்கள். அவரிடம் தான் கோலாட்டம், கும்மி ஆகியவற்றை முறைப்படி கற்றேன்.

**◆ தங்களின் கரகாட்டம் பற்றி...?**

''கரகம் பிறந்ததம்மா<br>
கன்னூர் மேடையிலே<br>
அலகு பிறந்ததம்மா<br>
அயோத்தி நகர் பட்டணத்திலே<br>
பிரம்பு பிறந்ததம்மா<br>
பிச்சாண்டி சந்நிதியிலே<br>
உடுக்குப் பிறந்ததம்மா<br>
உருத்திராட்சப் பூமியிலே<br>
பம்பை பிறந்ததம்மா<br>
பளிங்கு மண்டபத்திலே<br>
வேம்பு பிறந்ததம்மா<br>
விநாயகர் பட்டணத்திலே''

இத்தனையும் கரகம் எடுப்பவர்களுக்கு முக்கிய அம்சங்களாகும்.

சிறுவயதிலிருந்தே அதாவது 16 வயதிலிருந்து தொடர்ச்சியாக தற்பொழுது எனக்கு 86 வயது. இந்த வயதிலும் தலையில் கரகம் சுமந்து செடில் ஏற்றி, கையில் பிரம்பும் வேப்பிலைகளுடனும் ஆடி வருகின்றேன். யாழ்ப்பாணம், வவுனியா, சந்நிதி, குமுழமுனை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு என 100 இற்கு மேற்பட்ட இடங்களில் 300 இற்கும் அதிகமாகக் கரகம் ஆடியிருக்கின்றேன்.

மிருதங்கம் இசைக்க ஆடியிருக்கின்றேன், நட்டுவமேளம் இசைக்க ஆடியிருக்கின்றேன், பறை இசைக்க ஆடியிருக்கின்றேன், உடுக்கு இசைக்க ஆடியிருக்கின்றேன், பல பாடல்களுக்கும் ஆடியிருக்கின்றேன். கரகாட்டத்தை எனது இறுதி மூச்சு இருக்கும் வரை அழியவிடாது காத்து வருவேன்.

**◆ தங்களின் உடுக்குக் கலை பற்றி?**

சிறுவயதில் சுய முயற்சி காரணமாக உடுக்குக் கலையைப் பயின்றேன். நேர்த்திக்காக கரகம், காவடி எடுப்பார்கள். அப்போது உடுக்கடிக்கும் முறை இருந்தது.

பலர் தங்களின் கரகம், காவடிக்கு உடுக்கிசைக்கும் படி கேட்பார்கள். அந்த வேளையில் நானும் சென்று உடுக்கிசைப்பேன். தொடர்ந்து தமது நேர்த்திக் கடனுக்காக என்னை உடுக்கடிக்க அழைப்பார்கள். நான் சென்று உடுக்கடிக்கின்றேன். இன்னும் வீட்டில் இதற்கென நேரம் ஒதுக்கி உடுக்கிசைக்கின்றேன். அதிலே வருகின்ற நாதம் அற்புதமானது. பாரம்பரியக் கலைகளில் ஒன்றான உடுக்கினை அழியவிடாது காத்து வருகின்றேன்.

**◆ உடுக்குக்கலையை மீட்டெடுக்க என்ன செய்யலாம்?**

உடுக்குக் கலை தெய் வீகமான ஒரு கலையாகும். ஆதி பரமேஸ்வரன் கரங்களில் காணப்படும் இந்த உடு க்கு பல மெய்யுணர்வுகளைத் தட்டி எழுப்பக் கூடியது . எமது பாரம்பரியக் கலைகளில் ஒன்று உடுக்குக் கலை என முதலில் உணர வேண்டும். உடுக்கினை வாசிக்கத் தெரிந்தவர்களும் தயங்குகின்றனர்.

சிலர் கௌரவக் குறைவாகவும் நினைக்கின்றனர். இன்று ஆலயங்களில் நாதஸ்வர மேள வாத்தியங்கள் உயர்ந்து காணப்படுவதனால் உடுக்கின் தன்மை குறைந்துள்ளது. கலாசாரத் திணைக்களத்தினால் இலக்கிய ஆற்றுகைப் போட்டிகளை நடத்தி வருகின்றார்கள். அதில் உடுக்கு வாசித்தல் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்க வேண்டும்.

உடுக்குக் கலைஞர்களைக் கண்டு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும். உடுக்குக் கருவியினை வழங்கி உடுக்கு இசை அரங்கேற்றத்தை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலை மட்டங்களில் உடுக்குக்கலை சார்ந்த கருத்தமர்வுகளை மேற்கொள்வதோடு உடுக்கு சார்ந்த இசை வகுப்புக்களை நடத்திச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும். தொலைக்காட்சி நாடகங்களிலும் தொலைபேசி அதீத பாவனையிலிருந்தும் விடுபெற்று எமது அடுத்த தலைமுறைக்கு இந்த உடுக்கு கலையை கையளிக்க முன்வர வேண்டும்.

**◆ தங்களின் கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம்பற்றி?**

சென்ற மாதம் யாழ்ப்பாணப் பல்கலைகக்கழகத்திலிருந்து 60 மாணவர்கள் கோலாட்டம் பயில்வதற்காக வந்திருந்தார்கள். அவர்களுக்கு தீர்த்தக் கரையில் வைத்து ஒரு நாள் முழுவதும் கோலாட்டம் பழக்கினேன்.

பாடசாலை கலை நிகழ்வுகள், கிராமக்கலை நிகழ்வுகளின் போது குறித்த ஒரு அணியினரை உருவாக்கி மேடையேற்றி வருகின்றேன். சிறு வயதில் தொடங்கிய இந்தக் கோலாட்டத்தை இளம் தலைமுறையினருக்குக் கையளித்த வண்ணம் உள்ளேன்.

கும்மியாட்டத்தை பலருக்குப் பயிற்றுவித்து வருகின்றேன். பல கலை நிகழ்வுகளில் கும்மியாட்டத்தை அறிக்கை செய்கின்றேன். அதற்குத் தகுந்த பாடல் இசைகள், ஆடை, அணிகலன்கள், ஒப்பனைகள் என்பனவற்றை மேற்கொண்டு தகுந்த ஒத்திகையின் பின்னரே மேடையேற்றி வருகின்றேன்.

சிலம்பாட்டம் இது தற்காப்பு கலையுடன் தொடர்புடையுது. சண்டையிடுவதற்காகவே மாத்திரமே இதனைப் பழகுகின்ற மன நிலை ஒரு சிலரிடம் உள்ளன. இது எமது பாரம்பரியம், தமிழரின் வீரத்தின் அடையாளங்களில் ஒன்று. சிலம்பாட்டம் என்ற மனோநிலை இன்னமும் வரவில்லை. சிலம்பு எடுத்துச் சுற்றுகின்ற போது எங்கள் கைகள், கால்கள், உடல்கள் அசைந்து உடல் ஆரோக்கியத்தை தருகின்றது. சிலம்பாட்டம் பல நோய்களிலி ருந்து விடுபடவும் நோய்கள் வரா மல் இருக்கவும் உதவி செய்கின்றது.

குறித்த சிலருக்கு இத னைக் கற்றுக் கொடுத்தே வருகின்றேன். சிறுவயதிலிருந்து தொடங்கிய கும்மி கோலாட் டம், சிலம்பாட்டம் ஆகிய பாரம்பரியக் கலைகளில் இன்றும் பயணித்து வருகின்றேன்.

**◆ நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

2012 இல் ஆளுநர் விருதையும் 2013 இல் கலாபூஷண விருதையும் 2016 இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ''முல்லைக் கலைக்கோ'' விருதையும் 2016 இல் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் ''முல்லைப்பேரொளி'' விருதையும் 2016 இல் AVT திரைப்படம் தயாரிப்பு நிறுவனத்தினால் "மூத்த கலைஞர்" விருதையும் பெற்றேன்.

**◆ இறுதியாக நீங்கள் மனந்திறந்து கூறுவது?**

ஆரம்ப காலங்களில் முல்லைத்தீவுஆலயங்களின்விழாக்களிலும் கலை விழாக்களிலும் கரகம், கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம் என்பனவற்றையே நிகழ்த்தி வந்தனர்.

பின்னர் சற்றுக் குறைந்து குறைந்து பாரம்பரியக் கலைகளின் ஆற்றுகைக்குப் பதிலாக இசைக்கு நிகழ்த்துகின்ற முறைமை உருவாகியது.



இன்றைய இளம் தலைமுறையினரும் இவற்றினைத் தான் எதிர்பார்க்கிறார்கள், விரும்புகின்றார்கள். இசை நிகழ்ச்சியைப் பார்வையிட வருகின்ற இளம் தலைமுறையினரில் சிலர் வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள்.

பாரம்பரியக் கலைகளை ஆற்றுகை செய்யும் போது வன்முறைப் போக்குகளை பார்வையாளர்களிடம் காண முடியாது. குறிப்பிட்ட நேரத்திற்குள் அக்கலைகள் நிறைவடைந்துவிடும். கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம் போன்ற கலைகளை விட கரகாட்டம் மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது.

கரகாட்டத்தைப் பழக்க லாம் என்று நாங்கள் இந்த வயதிலும் நினைக்கின்றபோது யாருமே முன்வந்து பழகத் தயாரில்லை.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுடன் மகிந்த இணைவது நல்லது வசந்த சேனநாயக்க விருப்பம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தத் தேசிய அரசுடன் இணைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நாட்டைத் துரிதமாக முன்னேற்றி விடலாமே என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தேசிய அரசில் அனைவரும் இணைந்து இந்த நாட்டின் அபிவிருத்திக்காக வேலை செய்ய வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூட எம்முடன் இணைய வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

மைத்திரி அணி, ரணில் அணி மற்றும் மகிந்த அணி என மூன்று அணிகளும் ஒன்று சேர்ந்தால் அதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் இந்த நாட்டுக்குக் கிடைக்காது.

நாட்டை முன்னேற்றுவதற்கு அதைவிட ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்காது. ஆனால், அது நடக்குமா? என்பது தான் சந்தேகம்.

குறுகிய அரசியல் இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் ஒன்றிணைவது தான் நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லது. அதற்கான அழைப்பை நான் மகிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கின்றேன்.

ஒருவரை ஏசிக்கொண்டும் விமர்ச்சித்துக் கொண்டும் அரசியல் செய்வதால் இந்த நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்காது.

நான் தான் ஆட்சிசெய்ய வேண்டும் என்ற மனோநிலையை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் ஆட்சி செய்வோம் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் எல்லோரும் வர வேண்டும்.

அவ்வாறில்லாது போலியாக நாம் தேசபக்தி பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அது பொய்யான நாட்டுப்பற்றாகும். எம்மைவிட பின்நின்ற எத்தனையோ நாடுகள் முன்னேறி விட்டன.

ஆனால், நாம் பின்னோக்கியே தான் சென்று கொண்டிருக்கின்றோம். எமது பிழையான அரசியலே இதற்குக் காரணம்.

இந்த அரசியல் கலாசாரம் மாற வேண்டும். அப்போதுதான் நாமும் ஏனைய நாடுகளைப்போல் முன்னுக்கு வர முடியும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஊடகவியலாளர் மெல் குணசேகர கொலை; குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர் மெல்குணசேகரவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணைத் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இதன்படி குற்றம் சுமத்தப்பட்டிருந்த நபருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றிம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கொழும்பு உயர் நீதி மன்றின் நீதிபதி பியசேன ரணசிங்க இந்த வழக்கு குறித்த தீர்ப்பினை அறி வித்தார்.

தொம்பே பிரதேசத்தில் துருலாந்தி அன்தனி ரம்சான் ஜோர்ஜ் என்ற நபருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

மெல் குணசேகரவின் வீட்டுக்கு நிறம் பூசும் பணிகளில் ஈடுபட்டிருந்த குறித்த நபர் வீட்டை கொள்ளையிட முயற்சித்துள்ளார்.

கொள்ளையிடச் சென்றிருந்த போது ஊடகவியலாளர் மெல் குணசேகர வீட்டில் இருந்த காரணத்தினால் பாண் வெட்டும் கத்தியைக் கொண்டு அவரை கொடூரமாகத் தாக்கி கொலை செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த சம்பவம் இடம்பெற்றிருந்தது டன், மெல் குண சேகர இல ங்கையின் மிகப் பிரபலமான பெண் ஊடகவிய லாளர்க ளில் ஒருவராக திகழ்ந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உதயங்கவின் கடவுச் சீட்டு குறித்து நாடாளுமன்றில் தவறான தகவல்



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டை அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதாகவும் உதயங்க வீரதுங்க அதனை இன்னும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் டுபாய் நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த போது உதயங்க வீரதுங்கவும் அந்நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் இது சம்பந்தமாக கேள்வி எழுப்பிய போது, உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் வெளி விவகார பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா நாடாளுமன்றத்தில் பதிலளித்ததாகவும்.

ஆனால் கடந்த வாரம் கோட்டை நீதிமன்றம் கடவுச்சீட்டுக்களை இரத்துச் செய்து உத்தரவிட்டதாகவும் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,முன்னாள் வெளிவிவகார பிரதியமைச்சர் கடவுச்சீட்டு இரத்துச் செய்யப்பட்டு விட்டதாக நாடாளுமன்றத்தில் தவறான தகவலை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த கேள்விக்கான விரிவான பதில் விரைவில் வழங்கப்படும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (இ-7)

## கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்

கேரளக் கஞ்சாவுடன் நபரொருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம். ஆர். சேனநாயக்க பொலிஸ் குழுக்களின் தலைமையில் திடீர் சோதனையின் போது பனிக்கன்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்வர்நேற்று, மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக இளவாலைப் பொலிஸ் நிலைய பதில் கடமை அதிகாரி ஆ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (இ-5-10-104)

## லியனகே இராஜினாமா!

ஜனாதிபதி வாக்குறுதி அளித்தவாறு கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை வழங்காமையால் அதிருப்தி அடைந்துள்ள பிரபல வர்த்தகரும் கட்டாருக்கான இலங்கை தூதுவருமான ஏ.எஸ்.பி.லியனகே தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தைக் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனோ அரசாங்கத்துடனோ தமக்கு எவ்வித முரண்பாடுகளும் இல்லையென தெரிவித்துள்ள ஏ.எஸ்.பி.லியனகே, தாம் ஏமாற்றமடைந்த காரணத்தினாலேயே பதவியை இராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அரசாங்கத்துக்கான தமது ஆதரவு தொடர்ந்தும் காணப்படுமென தெரிவித்துள்ள லியனகே, தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரபல தொழிலதிபரான ஏ.எஸ்.பி.லியனகே, நல்லாட்சி அரசாங்கத்தால் கடந்த மார்ச் மாதம்கட்டாருக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டார். அண்மையில் வெற்றிடமாகியிருந்த கிழக்கு ஆளுநர் பதவிக்கு அவரை நியமிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், பின்னர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, கிழக்கு ஆளுநர் பதவியை எதிர்பார்த்தே கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏ.எஸ்.பி.லியனகே கட்டாரிலிருந்து இலங்கை வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 135 நாட்களை எட்டியுள்ள பட்டதாரிகளின் போராட்டம்




135 நாட்களாக தாங்கள் போராடிவரும் நிலையில் இதுவரையில் நம்பிக்கை தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்காத மத்திய, மாகாண அரசுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றார்கள் என்பது தமக்கு கேள்வியாகவே இருந்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக 135 ஆவது நாளாகவும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது தொழில் உரிமையினை வழங்குமாறு கோரிக்கை விடுத்து மழை, வெயிலுக்கு மத்தியிலும் பட்டதாரிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தினமும் பல்வேறு பிரச்சினைகளை சுமந்த வண்ணமாக போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்து செல்லும்போது தமது நிலை தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கவலையளிப்பதாக பட்டதாரிகள் தெரிவித்தனர்.

தமது போராட்டத்திற்கு தீர்வு பெற்றுத்தரும் வகையில் ஒரு சின்ன நம்பிக்கையினை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பது கவலையள்ிப்பதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ரி.கிஷாந்த் தெரிவித்தார்.

1700 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறைசேரி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையிலும் இதுவரையில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்காமை அரசியல்வாதிகளின் அலட்சியத்தன்மையா?அல்லது அதிகாரிகளின் அலட்சியத் தன்மையா? என்பது தெரியாது உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான அழுத்தங்களை எமது அரசியல்வாதிகள் வழங்கவேண்டும். இதில் எந்த காழ்ப்புணர்ச்சியையும் காட்டாது கற்றவர்கள் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் பிரச்சியை தீர்ப்பதற்கு என உளப்பாங்குடன் செயற்படவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## வீட்டில் கள் உற்பத்தி இளவாலையில் ஒருவர் கைது

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் வைத்து கள் உற் பத்தி செய்த நபர் ஒருவர் இளவாலை பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை பெரியவிளான் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸாரினால் சுற்றி வளைக்கபட்ட போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்வர் மீது வழக்குப் பதிவு செய்து நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதாக இளவாலை பொலிஸ்நிலையபதில்கடமை அதிகாரி ஆ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (இ-5-10-104)

## காணாமற் போனோர் சட்டமூலத்திற்கு மகிந்த எதிர்ப்பு



(கொழும்பு)

காணாமற் போதல்களில் இருந்து பாதுகாப்புப் பெறும்சாசனம் குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளதாகவும் அதற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக, முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே, அவர் இதைத் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்கள் நேர்மையானவர்களா?



ஒருநாள் அக்பர் தனது அரசவையில் கூடியிருந்தவர்களிடம், "எனது அரசாட்சியில் மக்கள் நேர்மைக்கு எடுத்துக் காட்டாக வாழ்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்.

உடனே சபையிலிருந்த அனை வரும் "ஆம் அரசே உங்கள் பொன்னான ஆட்சியில் அனைவரும் நேர்மையைக் கடைபிடிக்கின்றனர். இதை யாரும் மறுக்கவே முடியாது." என்றனர்.

ஆனால் பீர்பால் மட்டும் அமைதியாக இருப்பதைக் கண்ட அக்பர், "ஏன் மௌவுனமாக இருக்கிறாய் பீர்பால் மக்கள் நேர்மையாக இருப்பதைப் பற்றி உன் கருத்து என்ன?" என்று கேட்டார். உடனே பீர்பால், "இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்றால், நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும் அரசேமக்கள் அனைவருக்கும் நீங்கள் விருந்து வைக்க வேண்டும். விருந்துக்கு வரும் போதுஒருகுடத்தில்பால் கொண்டு வர வேண்டும் என்று உத்தர விட வேண்டும்," என அக்பரிடம் வேண்டு கோள் வைத்தார்.

பீர்பால் கேட்பதில் ஓர் உள்ளர்த்தம் இருப்பதை உணர்ந்து கொண்ட அக்பர், உடனே விருந்து பற்றி பொது மக்களிடம் தெரிவிக்கும்படி உத்தரவிட்டார்.

தண்டோரா போட்டபடியே அனைத்து வீதிகளுக்கும் சென்ற அரசவை அறிவிப்பாளர், "நமது பேரரசர் அனைவருக்கும் விருந்து வைக்கிறார். விருந்துக்கு வருவோர் கண்டிப்பாக ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும். இது அரசு உத்தரவு, என்று உரத்த குரலில் அறிவித்தார்.

இதைக் கேட்டு குழப்பமுற்ற மக்களில் பலர், "அரசர் விருந்தளிப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயம் தான். ஆனால் குடத்தில் எதற்காக பால் கொண்டு செல்ல வேண்டும்,"என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். அங்கிருந்த பெண்கள், "சரி ஒரு குடம் பால் தானேகொண்டு போய் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று குழப்பத்துடன்கூறி விட்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

அரசர் அறிவித்த விருந்து நடைபெறும் நாள் வந்தது. அக்பர், பீர்பால் உள்பட அரசவையில் முக்கியப் பதவிகளில் இருப்போர் அனைவரும் கூடியிருந்தனர். பீர்பால் ஏற்பாட்டின் படி, திடலின் பிரதான வாசலில் மிகப் பெரிய பாத்திரம் மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. மூடியில் பெரிய ஓட்டை போடப்பட்டிருந்தது.

பொதுமக்கள் அனைவரும் உத்தரவின் படி தாங்கள் கொண்டுவந்த பாலை, மூடியிலிருந்த ஓட்டை வழியாக பாத்திரத்தில் கொட்டி விட்டு வெறும் குடத்துடன் திடலுக்குள் நுழைந்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அக்பர், "நீ சொன்னபடி செய்தாகி விட்டது பீர்பால். இவ்வளவு பாலையும் என்ன செய்யப் போகிறோம்?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் காவலர்களைப் பார்த்து, "பாத்திரத்தை மன்னருக்கு அருகில் கொண்டு வாருங்கள்" என உத்தர விட்டார்.

பாத்திரம் அருகில் கொண்டு வரப்பட்டதும், அதன் மூடியை அகற்றச் சொன்னார் பீர்பால். மூடி அகற்றப்பட்டதும் பாத்திரத்தைப் பார்த்த மன்னர், அதில் வெறும் தண்ணீர் மட்டுமே இருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார்.

"பீர்பால் என்ன இது, பால் இருக்க வேண்டிய பாத்திரத்தில் வெறும் தண்ணீர் உள்ளதே?" என அதிர்ச்சி மாறாமல் கேட்டார்.

ஆனால் இதை முன்பே எதிர்பார்த்தது போல நிதானமாக பேசிய பீர்பால், "மக்களின் நேர்மை பற்றி என்னிடம் நீங்கள் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில் அரசே! மற்றவர்கள் பால் கொண்டு வரட்டும், நாம் தண்ணீர் கொண்டு போய் பாத்திரத்தில் கொட்டினால் யார் கண்டு பிடிக்க முடியும் என்று ஒவ்வொரு வரும் நினைத்துள்ளனர். எனவே தான் பாத்திரம் முழுதும் தண்ணீர் உள்ளது. கூட இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வந்து விடக்கூடாது அரசே.." என்று சிரித்தபடியே கூறினார்.

பீர்பாலின் அறிவுக்கூர்மையை மெச்சிய அக்பர், அவரை ஆரத் தழுவிக் கொண்டார்.

# 07.2017 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1885 - பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்டர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை வெறிபிடித்த நாய் ஒன்றினால் கடிபட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.
- 1892 - தாதாபாய் நௌரோஜி பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முதலாவது இந்தியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1935 - சிங்கப்பூரின் தமிழ் நாளிதழ் தமிழ் முரசு ஆரம்பிக்கப்பட்டது.
- 1956 - சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1962 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைக் கொலை செய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்தத் துறவி தூக்கிலிடப்பட்டார்.
- 1964 - மலாவி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1966 - மலாவி குடியரசாகியது.
- 1967 - நைஜீரியப் படையினர் பயாஃப்ராவினுள் நுழைந்து போரை ஆரம்பித்தனர்.
- 1988 - வட கடலில் எண்ணெய் அகழ்வு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 167 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 2005 - லண்டன் நகரம் 2012ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தத் தேர்ந்தெடு க்கப்பட்டது.

பிறப்புகள்

- 1781 - இசுடாம்போர்டு இராஃபிள்சு, ஆங்கிலேய அரசியல்வாதி, சிங்கப்பூரை நிறுவியவர் (இ. 1826)
- 1870 - பரிதிமாற் கலைஞர், தமிழறிஞர் (இ. 1903)
- 1930-எம். பாலமுரளிகிருஷ்ணா, கருநாடக இசைப் பாடகர் (இ. 2016)
- 1932 - பூ. கணேசலிங்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி
- 1940 -நுர்சுல்தான் நசர்பாயெவ், கசக்ஸ்தானின் 1ஆவது சனாதிபதி
- 1946 - ஜார்ஜ் வாக்கர் புஷ், அமெரிக்காவின் 43வது அரசுத்தலைவர்
- 1946 -சில்வெஸ்டர் ஸ்டாலோன், அமெரிக்க நடிகர்
- 1975 - 50 சென்ட், அமெரிக்க ராப் இசைக்கலைஞர்
- 1979 - கெவின் ஹார்ட், அமெரிக்க நடிகர்
- 1980 - இவா கிரீன், பிரெஞ்சு நடிகை
- 1981 - நிகிதா துக்ரல், இந்திய நடிகை
- 1985 - ரன்வீர் சிங், இந்திய நடிகர்

இறப்புகள்

- 1827 - தோமஸ் மன்றோ, சென்னை மாகாண ஆளுநர் (பி. 1761)
- 1985- மௌனி, தமிழக எழுத்தாளர் (பி. 1907)
- 1986 - ஜெகசீவன்ராம், 4வது இந்திய துணைப் பிரதமர் (பி. 1908)
- 2002 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (பி. 1932)
- 2005 - கிளாட் சிமோன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1913)
- 2011 - கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1932)

சிறப்பு நாள்

- ஆசிரியர் நாள் (பெரு)
- விடுதலை நாள் (மலாவி, 1964)
- விடுதலை நாள் (கொமொரோஸ், 1975)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 100 | 140 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 230 | 250 | 400 | 300 |
| தக்காளி | 160 | 200 | 110 | 200 | 160 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கோவா | 150 | 200 | 100 | 160 | 120 | 120 |
| கரட் | 200 | 400 | 300 | 300 | 300 | 300 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 | 100 | 80 |
| புடோல் | 100 | 120 | 50 | 100 | — | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 60 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 300 | 320 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 180 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 140 | 150 | 50 | 160 | 160 | 120 |
| பயற்றங்காய் | 120 | 150 | 80 | 90 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 150 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 120 | 80 | 120 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 300 | 150 | 280 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 150 | 240 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 300 | 120 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்பள்ள | 140 | 100 | 100 | 140 | 160 | 120 |
| கீரை-1பிடி | 30 | 40 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 | 80 | 120 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | — | — | — | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 250 | 230 | 200 |
| முள்ளங்கி | 60 | 150 | 30 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 10 | 150 | — | — | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்து கொள்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## என்ன மக்காள் உங்கட அரசியலமைப்பு சரிவராது போல

அது ஓர் அமைதியான ஊர். ஆலயத்தின் முன்றலில் அகன்று விரிந்து நிழல் பரப்பும் ஆலமரம்.

மரத்தின் பருமனும் விரிசலும் பழமையின் அடையாளமாகக் காட்சி கொடுத்தது.

ஆலமரத்தின் கீழ் மூன்று பேர் குந்தியிருந்து கதைத்துக் கொண்டிருந்தனர். ஆலமரம் மட்டுமல்ல அந்த மூவரும் முதியவர்கள்தான்.

அமைதியான சூழலில் இவர்கள் என்னதான் கதைக்கிறார்கள் என்று அறிய மனம் அவாக் கொண்டது. மரத்தில் மறைந்து நின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இப்படி ஒரு கடிதம் எழுதுவது என்று அங்கிருந்த பெரியவர் ஒருவர் கூற, மற்றவர் எப்படி என்று சொல்லுங்களன் என்றார்.

அந்தப் பெரியவர் எப்படிக் கடிதம் எழுதுவது என்பதைச் சொல்லுகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் வணக்கம்.

கெடுகாலம் உங்களையும் நல்லா கஷ்டப்படுத்துகிறது என்பதை எங்களால் உணர முடிகிறது.

இறைவனை நினையுங்கள். தொடர்ந்தும் தீயன பற்றிச் சிந்தியாதீர்கள். கேடு வருகின்ற போது கெட்ட சிந்தனைகள்தான் முன்னெழும். எதற்கும் பொறுமை, நிதானம் என்பவற்றைக் கடைப்பிடியுங்கள்.

அது சரி, எங்கட சம்பந்தர் ஐயா சொன்னவர் மிக விரைவில் நல்லதொரு செய்தி வருமென்று.

இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவருக்கு நாட்டில் நடக்கின்ற சம்பவங்கள் அக்குவேறு ஆணி வேறாகத் தெரிய வரும் தானே! என்று நாங்களும் நம்பினம். ஆனால் ஒன்றையும் காணவில்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தப் பணிகள் இன்னும் நடந்து முடியவில்லை போலும். அது வந்துவிட்டால் எல்லாப் பிரச்சினையும் தீரும் என்று சம்பந்தர் ஐயா சொன்னவர்தானே. அதால அந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நம்பியிருந்தம்.

ஊடகங்களில் ஒரு செய்தி. அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் மிகக் குறைந்தளவு அதிகாரங்கள்தான் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுமென்று ஜயம்பதி விக்கிரமரட்ண கூறியுள்ளார் என அறிந்தம்.

அதன் பிறகு; சமஷ்டி இல்லை, வடக்கு கிழக்கு இணைப்பும் கிடையாது. பொலிஸ், காணி அதிகாரத்துக்கு எல்லாம் கவுன்சில் நியமனம் என்ற மாதிரித் தகவல் வந்தது.

என்ன நாசமறுப்பு எண்டாலும் வந்து சேரட்டும். சர்வதேச விசாரணையை வலியுறுத்தாத எங்கட தமிழ் அரசியல் தலைமையோட நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்தம்.

அடக் கடவுளே! இப்ப புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்க தேரர்கள் அறிவித்திருக்கினம்.

இனி எதுவும் நடக்காது என்பது சர்வநிச்சயமாகிற்று, இந்த விடயம் எங்களைப் போன்ற சாதாரண மக்களுக்கும் தெரிந்திருந்தது.

ஆனால், அரசியலில் பழுத்த அனுபவமுள்ள கூட்டமைப்பினருக்குத் தெரியாமல் போனதுதான் அதிசயமான உண்மை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றிருந்த கூட்டமைப்பின் தலையில எதையோ போட்ட மாதிரி நிலைமை ஆயிற்று.

இப்படி நாங்கள் சொல்லுகிறது சரியோ பிழையோ தெரியாது. இருந்தும் என்ன மக்காள் உங்கட அரசியலமைப்பும் சரிவராது போல அப்படித்தானே!

# கடும் தீர்மானங்கள் மூலம் பொருளாதாரம் முன்னெடுக்கப்படும்

## பிரதமர் ரணில்

பொருளாதாரத்தை தவறவிட்டு அரசியல் செய்ய முடியும் என பலர் எண்ணிக் கொண்டிருப்பதாகவும், சிரமம் ஏற்பட்டால் தீர்மானங்களை எடுத்து பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, ஆட்டிகலை மாவத்தையில் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இப்படியான சிரமமான பல தீர்மானங்கள் முதல் இரண்டு வருடங்களில் எடுக்கப்பட்டன.

எனினும் அபிவிருத்திக்கு முதல் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாது நாடு என்ற முறையில் முன்னோக்கி செல்வது மிகவும் கடினமானது.

கடந்த காலத்தில் கடனுக்காக வட்டியை கூட செலுத்த முடியாத நிலைமை இருந்தது என்பதை மறந்து விடக் கூடாது.

இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்க சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு பாராட்டுகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் ஏன் நிதியுதவியை பெறுகின்றீர்கள் என பலர் கேட்டனர். எமக்கு தேவையான நிதியுதவியை பெற வேண்டும். எமக்கு தேவையான நிதியுதவியை அவர்கள் வழங்கினர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டுக்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்ள முடிந்தது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## மன்னாரில் தொடர்ச்சியாக சிக்கும் கேரள கஞ்சா

(மல்லாவி)

தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தினை மடு புகையிரத நிலையத்தில் வைத்து சோதனையிட்ட மடு பொலிஸார் 20 கிலோவும் 585 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா உள்ளடங்கிய 02 பொதிகளைக் கைப்பற்றியுள்ளதாக மடுப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் புகையிரதத்தில் கஞ்சாப் பொதிகள் கடத்தப்படுவதாக தலை மன்னார் பொலிஸ நிலையத்திற்கு இரகசியத் தகவல்ஒன்று கிடைத்துள்ளது.

அந்தத் தகவல் கிடைத்த வேளை புகையிரதம் தலைமன்னார் பொலிஸ் நிலைய கட்டுப்பாட்டுப் பகுதியைத் தாண்டி மடுப் பொலிஸ் நிலையப் பிரிவில் பயணிப்பதை அறிந்து கொண்ட தலைமன்னார் பொலிஸார் உடனடியாக இரகசியத் தகவலை மடு பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் வழங்கிய தகவலுக்கமைய, விரைந்து செயற்பட்ட மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.மடவல தலைமையிலான விசேட பொலிஸ் அணியினர், மடு புகையிரத தரிப்பிடத்தில் வைத்து புகையிரதத்தை தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டபோது 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான சுமார் 20 கிலோவும் 585 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சா போதைப் பொருள் 02 பொதிகளில் மிக நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணிகளின் பொதிகளுடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

இந்த கஞ்சாக் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இச்சம்பவத்தின் போது கைது செய்யப்படாத நிலையில் மடுப் பொலிஸார் மேலதிக் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளனர். (மு-15)

## தில்லேஸ்வரத்தில் இன்று சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை அனுச நட்சத்திரத்தில் நடைபெறும்.

தில்லேஸ்வரப் பெருமானுக்கு கலச சங்காபிஷேகம் இடம்பெற்று பூசை வழிபாடுகள் நடைபெறும். (ந)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

இறைவன் தனித்து நின்றான். அவன் தலையில் இருந்து இரத்தம் இடையறாது பெருகிக் கொண்டிருந்தது.

காயத்திற்குக் கட்டுப்போட்டு அதை ஆற்றும் பொருட்டு நல்லதோர் மூலிகையைத் தேடி நாராயணன் இத்தனை நாட்கள் இருந்துவந்த புற்றைவிட்டுப் புறப்பட்டான்.

ஆரண்யத்தில் அலைந்து திரிந்தான். அப்போது தேவருலகைச் சேர்ந்த பிருகஸ்பதி அங்கே வந்து அவனைக் கண்டான்.

மனிதரூப மாதவா! எவர் பொருட்டு நீ இத்தனை இன்னல்களை ஏற்றுக்கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. என்ன பாடம் பயிற்றுவிக்க இப்படி நீ பரிதவிக்கிறாய் என்பதும் புரியவில்லை. ஆனாலும் உன் மண்டைக் காயத்திற்கு மருந்தொன்று சொல்கிறேன் கேள். அத்திமரத்துப் பாலை அந்தக் காயத்தில் களிம்பாகத் தடவ ஆறிப்போகும் என்று கூறி அகன்றார். (தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கேட்டது கிடைக்கும்



✦ மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அதை நாலாபுறமும் சிதற விட்டால் ஒன்று சேர்ப்பது கடினம்.

✦ இளம்மூங்கில் எளிதாக வளைவது போல, இளமையிலேயே மனதை நல்ல விடயங்களில் செலுத்துவது அவசியம்.

✦ நான் என்னும் அகங்காரத்தை அழித்து விட்டவன் கடவுளின் காட்சியைப் பெற்று மகிழ்வான்.

✦ கடவுள் கற்பக மரம் போல கேட்டதையெல்லாம் கொடுப்பதற்காகக் காத்திருக்கிறார்.

✦ [illegible] நிற்பதில்லை.
[illegible] மறையும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஆயிலியம், விசாகம், கேட்டை, மூலம் நட்சத்திரங்கள் தோஷமா?**

இந்த நட்சத்திரங்கள் தோஷம் கொடுக்கும் நட்சத்திரங்கள் இல்லை. அச்சப்படுபவர்கள் இவ்விதிப்படி பெண நட்சத்திர பாதத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.ஆயிலியம் 1 ஆம் பாதம் உத்தமம், விசாகம் 1,2,3. ஆம் பாதங்கள் உத்தமம், கேட்டை 1ஆம் பாதம் உத்தமம். (தொடரும்)

## மது ஏற்படுத்தும் தாக்கங்கள்

மது மூளையின் செயற்பாட்டை மந்தப்படுத்துகின்றது செயற்கையான மகிழ்ச்சி நிலையை ஆரம்பத்தில் ஏற்படுத்தினும் பின்னர் நடத்தைப் பிறழ்வுகளை ஏற்படுத்தும் இறுதியில் தொழிற்பாட்டு மந்த நிலை ஏற்படுத்தி, மயக்க நிலை, ஆழ்ந்த நித்திரை நிலையை ஏற்படுத்தும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுககாக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் கம்பர்மலை, கொத்தாண்டார் குளம், கோவில்வயல், மல்வில், முகாவில் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயை மூட்ட முய...

காகிதத்தை கூட பார்த்திருக்க மாட்டார்கள் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பௌத்த விகாரைகளுக்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான ஒரு காகிதம் கூட இன்னும் வெளியிடப்படவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் பலர் ஊடகங்களில் ஏதேனும் ஒன்றை கூறி தீயை மூட்ட விரும்புகின்றனர்.

அப்படி செய்தால், அவர்களின் புகைப்படத்துடன் அரை-பக்கத்தில் செய்தி வெளியாகும். இவர்கள் இப்படிதான் அரசியல் செய்ய விரும்புகின்றனர். இந்த கீழ்த்தரமான அரசியலை நாட்டில் ஒழித்து கட்டவேண்டும் என்றார் அவர். (மு-11)

## கீழ்த்தரமான சதிக...

மற்றும் குற்றம் புரிந்தோர் மீண்டும் ஆட்சிக்கு வருவதாக மக்களுக்கு காட்ட முயற்சிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கீழ்த்தரமான அரசியல் சதி ஊடாக அந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றிபெற முடியாதென்பதுடன், இன்று போல் நாளையும் நாட்டுக்கு தேவையான செயற்திட்டங்களை தற்போதைய அரசாங்கம் முறையாக அமுல்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் அலரிமாளிகையில் நடைபெற்ற அனைவருக்கும் நிழல் விருசுமித்துறு படைவீரர் வீட்டு உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்பி தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் பாடுபட்டுவரும் போது எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர கனவுகாணும் சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அந்த சதிகளை தோற்கடிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டுமென தெரிவித்தார்.

வீரமிகு படையினர் சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்லவேண்டியிருந்த நிலையை மாற்றி உலகில் எந்தவொரு நாடோ, சர்வதேச அமைப்போ அவர்கள் மீது கை வைக்க முடியாதவாறு சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெறுவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஊடகவியலாளர்களை கொலை செய்து, அவர்களை காணாமல் போகச் செய்து, ஊடக நிறுவனங்களுக்கு தீ வைத்த காலத்தை முடிவுறுத்தி அனைத்து ஊடகவியலாளர்களினதும் உயிர்களை பாதுகாப்பதற்கும், ஊடக நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்த தற்போதைய அரசாங்கத்தையே விமர்சித்து நாட்டில் பிரச்சினைகள் இருப்பதாக மக்களுக்கு காட்டுவதற்கு முயற்சிக்கும் சில ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கவலையடைவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (மு-11)

## மாலைக்கு பதில்...

அதற்கான உபாயம்தான் காணாமலாக்கப்படுதலிலிருந்து ஆட்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாய சட்டமூலமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பாராளுமன்ற கட்டத் தொகுதியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (மு-11)

# தேசிய எல்லே போட்டி கொழும்பு அணியை வீழ்த்தியது யாழ்.மாவட்ட தெரிவு அணி



02.07.2017 அன்று நடைபெற்ற தேசிய எல்லே போட்டியில் கொழும்பு மாவட்ட அணியை 05:06 என்ற அடிப்படையில் அதிரடியாக வீழ்த்தியது. யாழ். மாவட்டம் சார்பாக களம் இறங்கும் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச இளைஞர் தெரிவு அணி.(க)

## மாணவர் ஐவர்...

மாளிகாகந்தை நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மையில், சைட்டம் எதிர்ப்பு போராட்டத்தின் போது, சுகாதார அமைச்சின் வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## சைட்டத்தை தடை...

லூரியை ரத்து செய்யுமாறு கோரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று மாலை நுகேகொட ஆனந்த சமரகோன் திறந்த வெளியில் ஆரம்பமாகியுள்ளது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அச்சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏன் இந்தப் பிரச்சினை இன்னும் விளங்காதுள்ளது. நாம் விளங்கும் பாசையில் பேச தயாராகியுள்ளோம். இது எதிர்வரும் நாட்களில் தெரியவரும் எனவும் அவர் கூறியுள்ளார். (மு-11)

## அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் அன்ரனிஸ் வெற்றி



அமரர் கந்தசாமி ஆறு முகம் ஞாபகர்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 2017.07.02 அன்று நடைபெற்றது.

இரண்டாவது போட்டியில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியில் சென். அன்ரனிஸ் 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக செ.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ம.தனுஜன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

# மரண அறிவித்தல்



## திருமதி கமலாவதி இராஜகுலசூரியர்

திருமதி கமலாவதி இராஜகுலசூரியர் அவர்கள் 05.07.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராஜகுலசேகரம் - கௌரிஅம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், இராஜகுலசூரியர் (இளைப்பாறிய ஆசிரியர் - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், கஜரூபன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி தபோதினி கஜரூபன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி, சுன்னாகம் கிளை) அவர்களின் அன்பு மாமியாரும், செல்வன் - தனஞ்ஜெயன் (மாணவன் - யா/பரியோவான் கல்லூரி) அவர்களின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (முன்னாள் அரச அதிபர் - யாழ்ப்பாணம்), பத்மாவதி, மகாதேவா, திருக்கேஷன், ஜெகதீசன், சோமசுந்தரம், திலகவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை, செல்வராணி, ஞானேஸ்வரி, வீரவனிதா, ரட்ணலக்ஷ்மி, செல்லையா, காலஞ்சென்ற பரராஜசிங்கம், காலஞ்சென்ற விஜயகுலசிங்கம், கௌரிமனோகரி, அமரகுலசிங்கம், குமாரகுலசிங்கம், ஜெயகுலசிங்கம், காலஞ்சென்ற தேவமனோகரி, காலஞ் சென்ற இராஜேஸ்வரி, யோகாம்பிகை, மகாதேவன், விமலாதேவி, பவானி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2017) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

தகவல் : கணவர் - இராஜகுலசூரியர்
மகன் - கஜரூபன்

(9706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை திகதி...

யில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 227 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

அதேபோன்று, 5ஆம் தர புலமைப்பரிசில பரீட்சை 3 ஆயிரத்து 14 மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் இதில் 3 இலட்சத்து 56 ஆயிரத்து 728 மாணவர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (மு-11)

## மகாநாயக்கர்...

பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனம் தொடர்பான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இது குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் அவர்கள் மகாநாயக்க தேரர்களை சந்தித்துள்ளனர்.

தீவிரவாதத்தை இல்லாதொழிக்க செயற்பட்டவர்களுக்கு இந்தச் சட்டமூலத்தின் மூலமாக பாரிய பாதிப்பு ஏற்படும் என தமக்கு தெரிவதாக முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அவர்களை (விசாரணைக்கு) வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல முடியும் என முன்னாள் இராணுவ பிரதானிகள் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்துள்ளனர். (மு-11)

## ஊழல் ஒழிப்பு...

போதிலும் இதுவரை பிடிபட்ட திருடர்கள் எவருமில்லை எனவும் செயலகத்தை மூடுவதா இல்லையா என்பது அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ராஜித சேனாரத்ன இதனை குறிப்பிட்டுள்ளார்.

மிகப் பெரிய ஊழல் மோசடிகளை கண்டறியும் நோக்கில் இந்த செயலகம் ஆரம்பிக்கப்பட்டாலும் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து மாத்திரமே அந்த செயலகம் ஆராய்ந்து வந்ததாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## வித்தியா படுகொலை...

ஜெயவர்த்தன, 5ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி ரகுபதி, 4,7,9 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி.கேதீஸ்வரன் ஆஜராகியிருந்தார், 1 தொடக்கம் 9 வரையான எதிரிகளுக்கு மன்றால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி வி. ஜெயந்தன் ஆஜராகியிருந்தார்.

நேற்றைய தினம் வரை இடம்பெற்ற விளக்கத்தில் வழக்கு தொடுநர் தரப்பில் 20 சாட்சிகளின் விளக்கங்கள் இடம்பெற்றதுடன், 8 சாட்சிகளின் விளக்கங்கள் தேவை இல்லையென கருதி மன்றினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 18ஆம் திகதி 21, 31, 33, 38, 39, 49ஆம் சாட்சிகளின் விளக்கமும், எதிர்வரும் 19ஆம் திகதி 41, 44, 45, 46, 47, 50, 51 ஆம சாட்சிகளின் விளக்கமும், 20ஆம் திகதி 42, 43, 24, 35, 36, 37 ஆம் சாட்சிகளின் விளக்கமும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. குறித்த சாட்சிகள் அனைவருக்கும் மன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 18ஆம் திகதி வரை 9 எதிரிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதாய விளக்க நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். (மு-9)

## வித்தியாவின் உயிர்...

சாட்சியாக, வித்தியாவின் உடலினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய யாழ்.போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி யு. மயூரன் அழைக்கப்பட்டார்.

பிரதி மன்றாதிபதி குமார்ரட்ணத்தின் பிரதான விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் தனது சாட்சியத்தின் போது விளக்கமளிக்கையில்,

சிவலோகநாதன் வித்தியா என்னும் மாணவியின் கொலை வழக்கில் பிரேத பரிசோதனை தொடர்பாக சாட்சியமளிக்க வந்துள்ளேன். வித்தியாவின் உடலினை பிரேத பரிசோதனை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதியாக அக்காலத்தில் இருந்த நீதவான் லெலின்குமார் உத்தர விட்டார்.

அதற்கமைய 2015ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டேன்.

பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய சடலம் வித்தியாவினுடையது என்பதை 2 பேர் அடையாளப்படுத்தியிருந்தார்கள். உரும்பிராய் பகுதியில் வசிக்கும் வித்தியாவின் சித்தியான சறோயினி மற்றும் புங்குடுதீவில் வசிக்கும் வித்தியாவின் சகோதரனான கார்த்தி என்பரும் வித்தியாவின் உடலினை அடையாளப்படுத்தியிருந்தார்கள்.

2015.05.14 அன்று வித்தியாவின் சடலம் மீட்கப்பட்ட இடத்திற்குச் சென்றிருந்தேன். நான் சென்றதற்கு முதல்நாள் இரவும், காலையும் மழை பெய்து ஓய்ந்திருந்தது. வித்தியாவின் சடலம் இருந்த இடத்திற்குச் சென்ற போது, ஊர்காவற்றுறை பொலிஸார், தடயவியல் பொலிஸார் மற்றும் பல பொது மக்கள் கூடியிருந்தார்கள்.

வித்தியாவின் உடலிற்கு அருகில் யாரும் செல்லாதவாறு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. எச்சரிக்கை லேபிள் கட்டப்பட்டு பொலிஸாரினால் பாதுகாக்கப்பட்டிருந்தது.

வித்தியாவின் உடல் மல்லாக்காக இருந்தது. கண் மூடப்பட்டிருந்தது. பெண் உறுப்பு மட்டும் ஆடையால் மறைக்கப்பட்டிருந்தது. இரு கைகளும் தலைக்கு பின்புறமாக வைத்து கட்டப்பட்டிருந்தது. கையில் இரு பெருவிரலும் ஒன்றாக சேர்க்கப்பட்டு பச்சை நிற ரிபனால் கட்டப்பட்டிருந்தது.

இரு கால்களும் 180 பாகைக்கு விரிக்கப்பட்டு மரத்துடன் கட்டப்பட்டிருந்தது. வலது கால் மார்புக் கச்சையால் கட்டப்பட்டிருந்தது. இடது கால் சீருடையின் இடுப்பு பட்டியால் கட்டப்பட்டு இழுத்து அலரி மரத்தில் கட்டப்பட்டிருந்தது. கை, கால்கள் கட்டப்பட்ட நிலையை சட்ட வைத்திய அதிகாரி சைகைமூலம் செய்து காண்பித்தார்.

வித்தியாவின் தலை இடப்பக்கம் திரும்பியவாறு காணப்பட்டது. காது, மூக்கு வழியாக இரத்தம் போன்ற திரவம் வழிந்து காணப்பட்டது.

வாய்ப்பகுதி பகுதியளவில் திறந்து காணப்பட்டது. வாய்க்குள் ஆடை திணிக்கப்பட்டிருந்தது. நான் முதலில் வாயை பார்க்கும் போது ஆடை அதற்குள் இருந்ததை அவதானிக்கவில்லை. பின்னர் வித்தியா அணிந்திருந்த ஆடைகளை கணக்கெடுத்தபோதுதான் உற்று நோக்கினேன்.

அப்போதுதான் ஆடை வாய்க்குள் இருப்பதை கண்டேன். முதலில் நான் அதை நாக்கு வெளியில் வந்துள்ளது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

வேறு காயங்கள் வித்தியாவின் உடலில் காணப்பட்டதா என பிரதி மன்றாதிபதி கேள்வியெழுப்பினார். ஆம். என பதிலளித்த அவர், உடலின் பின்புறத்தில் உராய்வுக் காயம் காணப்பட்டது என தெரிவித்தார்.

மேலும் அவர் விளக்கமளிக்கையில், வித்தியாவின் உடலின் வலப்புறம் கிழிந்த சீருடை காணப்பட்டது. உடலின் பல இடங்களிலும் குருதி என்று கூறக்கூடிய படிவம் ஒன்று காணப்பட்டது. அதிலும் சான்றுகள் சேகரிக்கப்பட்டது.

இரண்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. ஜோனிப் பகுதியில் இருந்தும் வித்தியாவின் மார்புப் பகுதியில் இருந்தும் தலை முடி இரண்டினையும் சான்றுப் பொருட்களாக சேகரித்தேன்.

வித்தியாவின் கழுத்து பாடசாலை கழுத்தப்பட்டியால் (ரைய்) வழுக்கும் நிலையில் சுருக்கிடப்பட்டு கழுத்தில் கட்டப்பட்டிருந்தது. கழுத்து இடப்பக்கம் மேல் பக்கமாக இறுக்கப்பட்டிருந்தது. கழுத்தில் கட்டப்பட்ட கழுத்துப பட்டியின் மறு முனை அருகில் இருந்த அலரி மரத்தில் 2 அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்தது.

வித்தியாவின் உடலில் மொத்தமாக 8 காயங்கள் காணப்பட்டிருந்தது. ஒன்று தலைக்கு பின்புறமாக தலையுடன் எலும்பு கோர்க்கும் பிடரிப் பகுதியில் சற்று வலப்பக்கமாக 16X8 சென்றிமீற்றர் காயம் காணப்பட்டது. பின்புறப் பகுதி குருதி நிரம்பிக் காணப்பட்டது.

இச் சாட்சியப் பதிவின் போது மன்றின் அனுமதியுடன் நீதிமன்ற அலுவலகப் பணியாளர் ஒருவர் அழைக்கப்பட்டு, அவரை வித்தியாவின் உடல் போல் காண்பித்து காயங்கள் எங்கிருந்தது என்பதை தொட்டுக் காட்டி அடையாளப்படுத்தினார். உடலின் உள்ளே எலும்பு முறிவு எதுவும் இல்லை. ஆனால் மணடை ஓடு உள்ளே வீக்கம் ஏற்பட்டிருந்தது. மூளையில் இருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டதால் மூளையும் வீங்கிக் காணப்பட்டது.

இக்காயமானது, தாக்கப்பட்டபோது அல்லது தலை வன்மையான பகுதியில் அடிக்கப்படும் போது ஏற்படும். குறிப்பாக சீமெந்து தரை மரம் போன்ற வன்மையான பகுதிகளில் அடிப்பதால் ஏற்படும். ஒரே இடத்தில் மீண்டும் மீண்டும் தாக்கம் ஏற்படும் போது ஏற்பட்டிருக்கும்.

இரண்டாவது காயம் தலையில் மேற்பகுதி குறிப்பாக உச்சிப் பகுதியில் காணப்பட்டது. அதில் 7இற்கும் மேற்பட்ட காயங்கள் காணப்பட்டது. அக் காயங்கள் ஒவ்வொன்றும் 12X10 சென்றிமீற்றர் அளவுடையவை.

இக் காயங்கள் தட்டையான விசையினால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். அல்லது கூந்தலை பலமாக இழுத்ததினால் ஏற்பட்டிருக்கலாம்.

மூன்றாவது காயம் வலது கண் பகுதியில் காணப்பட்டது. அது கண்டல்வகையான காயம். 3X3 சென்றி மீற்றர் அளவான காயம் அது.

அக் காயம் மொட்டையான ஏதேனும் ஒன்றினால் ஏற்பட்டிருக்கும் அல்லது தாக்கப்படுவதால் ஏற்பட்டிருக்கும். இல்லாவிட்டால் அழுத்திப் பிடிப்பதனால் ஏற்பட்டிருக்கும்.

நான்காவது காயம் வித்தியாவின் மேல் உதட்டில் காணப்பட்டது. சிறிய அளவிலான கண்டல் காயம் அது. இக் காயமும் இறுக்கமாக அழுத்துவதால் ஏற்பட்டிருக்கும்.

ஐந்தாவது காயம் கழுத்தினை சுற்றிக் காணப்பட்டது. அது உராய்வினால் வந்த காயம். 35X1 சென்றிமீற்றர் அளவான காயம். வித்தியாவின் கழுத்தில் கட்டப்பட்ட கழுத்துப் பட்டியால் ஏற்பட்ட கண்டல் காயமாக அது இருக்கும். ஆனால் எலும்பு முறிவு ஏற்படவில்லை. இந்த காயம் சுவாசத்திற்கு தடையாக அமைந்திருக்கும் வெளியில் அழுத்தியதால் சுவாச குழாயில் சுருக்கம் ஏற்பட்டு, சுவாசம் தடைப்பட்டிருக்கும்.

6ஆவது காயம் கண்டல் வகையான காயமாக இருந்தது. வித்தியாவின் தோலை வெட்டிப் பார்க்கும் போதுதான் அது வலப் பக்க இடுப்பிற்கு சற்று மேலே காணப்பட்டது. அது பெரிய கண்டல் காயமாக இருந்தது. 18X12 சென்றி மீற்றர் அளவு பெரிய காயம் அது.

அந்த காயம் வித்தியாவின் உடலின் மேல் இருந்து அழுத்தத்தினை பிரயோகித்ததால் ஏற்பட்டிருக்கும்.

ஏழாவது காயம் உராய்வு காயம். 12X7 சென்றி மீற்றர் அளவு காயமாக இருந்தது. வித்தியாவின் பின்புறம் இரு விட்டத்திலும் காணப்பட்டது.

8ஆவது காயம் காலில் இருந்தது. அக் காயத்தில் புண் ஒன்றில் முள்ளும் இருந்தது. அது பச்சை நிறமான முள்ளு.

மேலும் வித்தியாவின் கண் மடல் உள்ளே இரத்தக் கசிவு காணப்பட்டது. கண்ணுக்கு வெளியே ஒட்டக் கூடிய திரவப் பதார்த்தமும் காணப்பட்டது. இது மூச்சுத் திணறலின் போது இவ்வாறான இரத்தக் கசிவு ஏற்படும்.

வித்தியாவின் வாய்க்கு உள்ளே றோஸ் கலர் (பிங்) ஆடை ஒன்று வாய்க்குள் திணிக்கப்பட்டு காணப்பட்டது. பற்கள் அனைத்தும் இருந்தது. மரணத்தினால் ஏற்படும் விறைப்பு முடிந்து உடல் அழுகும் நிலைக்குச் சென்றிருந்தது. மரணம் ஏற்பட்டு 18 தொடக்கம் 32 மணித்தியாலங்களில் உடல் அழுகல் நிலைக்கு சென்றுவிடும். 24 மணித்தியாயலங்கள் சென்றதும் முட்டைகளில் இருந்து புழுக்கள் குடம்பி நிலையினை அடைந்து செயற்பட ஆரம்பித்துவிடும்.

பெண்ணுறுப்பில் பல காயங்கள் காணப்பட்டது.

ஒரு முறை ஏற்படுத்தப்பட்ட உடலுறவுக்கு அப்பால் பல முறை பலரால் உடலுறவு கொள்ளும் போது ஏற்படும் என்பதை தெளிவாக கூற முடியும்.

மேலும் பலரால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சிறிய காலப்பகுதிக்குள் அல்லது குறுகிய நேரத்திற்கு அதிக தடவை பலவந்தமாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்படும் போதும் ஏற்பட்டிருக்கும்.

வித்தியாவின் நெஞ்சறை, சுவாசப்பை வீங்கிக் காணப்பட்டது. குருதிக் குழாயில் குருதி தேங்கியும் விரிவடைந்தும் காணப்பட்டது. இவ்வாறான மாற்றம் மூச்சுத் திணறலின் போது ஏற்படும்.

வித்தியாவின் வயிற்றுக்குள் 100 மில்லி லீற்றர் மஞ்சள் நிறத் திரவம் காணப்பட்டது. அது தேநீரை ஒத்ததாக காணப்பட்டது. அதில் மதுசாரமோ, நஞ்சோ கலக்கப்படவில்லை.

வித்தியாவின் மரணத்திற்கு 3 காரணங்கள் உள்ளன. ஒன்று தலையில் ஏற்பட்ட காயமாகும். மற்றயது கழுத்தில் ஏற்பட்ட நெரிவு ஆகும் மற்றும் வாய்க்குள் திணிக்கப்பட்ட ஆடையாகும்.

தலையில் ஏற்பட்ட காயம் உடனடியாக மரணத்தை ஏற்படுத்தாது. முதலில் வீக்கம் ஏற்படும். சிறிது நேரத்தில் மரணம் ஏற்படும். மூளையின் தாக்கத்தின் அளவும் இரத்த பெருக்கின் அளவும் மரணத்தின் நேரத்தை தீர்மானிக்கும்.

கழுத்தில் போடப்பட்ட சுருக்கு சில நிமிடங்களில் உயிரை பிரிக்கும். வாய்க்குள் அடைந்த துணி கொலை செய்வதற்காக துணி அடையாவிட்டாலும், சத்தம் போடுவதை தடுப்பதற்காக அடைத்திருக்கலாம்.

ஆனாலும் வாயில் உமிழ்நீர் சுரப்பதால் ஏற்படும் ஈரலிப்பு துணியை பாரப்படுத்தி அதனை தொண்டைக்குள் இழுக்கும். கைகள் கால்கள் கட்டப்பட்டிருந்தால் துணியினை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். அது சுவாசத்தை தடுத்திருக்கும். வாய்க்குள் துணி இருக்கும் போது மூக்கினால் சுவாசிக்கலாம். ஆனால் தொண்டைக்குள் துணி இருந்தால் சுவாசிக்க முடியாது. மூச்சுக் குழாயில் அடைப்பு ஏற்படும்.

கழுத்தில் சுருக்கிடப்பட்டு தொண்டைக்குள் துணி அடைந்தால் எவ்வளவு நேரத்தில் மரணம் சம்பவிக்கும் என மன்றால் கேள்வி எழுப்பப்பட்டது.

நில நிமிடங்களில் மரணம் ஏற்படும் என பதிலளித்தார்

மேலும் வித்தியாவின் சடலம் காணப்பட்ட இடத்தில் தடயங்கள் அழிவடைந்திருந்தது.

மழை பெய்ததாலும் எறும்பு மற்றும் புழுக்களின் நடமாட்டத்தினாலும் சில தடயங்கள் அழிவடைந்திருக்கும்.

விந்தில் குளுக்கோஸ் அதிகளவில் இருக்கும். அது எறும்பினை கவருவதாக இருக்கும்.

வித்தியாவின் சடலம் இருந்த இடத்தில் வைத்தா அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என கேள்வி எழுப்பப்பட்ட போது,

இல்லை. என பதிலளித்த அவர் அவ்வாறு நடந்ததற்கான தடயங்கள் அங்கு இல்லை. வித்தியாவின் சடலம் காணப்பட்ட இடம் அலரி மற்றும் பூவரசு போன்ற மரங்களில் இருந்து விழுந்த இல்லைகளால் பரவி மெத்தை போன்று காணப்பட்டது.

வித்தியாவின் சடலம் இருந்த இடத்திலும் சருகுகள் அசையாமல் அப்படியே இருந்தது. குறிப்பாக 4 அடி தூரத்திற்கு எந்த அசைவுகளும் இல்லை. இதனால் வித்தியா அங்கு வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்று சாட்சியமளித்தார்.

இச் சாட்சியத்தினை தொடர்ந்து எதிரி தரப்பு சட்டத்தரணிகளால் அவருடைய சாட்சியம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சாட்சி மன்றினால் விடுவிக்கப்பட்டார். (மு-9)

## பௌத்த பீடங்களின்...

யுத்தம் முடிந்து எதிர்காலத்துக்குத் தேவையான புதிய அரசியல் அமைப்பு தேவை என கூறிய பாராளுமன்ற உறுப்பினர், சமாதானம், அபிவிருத்தி சகல மட்டங்களிலும் விரைவுபடுத்தப்பட வேண்டும் எனவும் கூறினார்.

அதே போல் மகாநாயக்க தேரர்களை என்றும் கௌரவிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவர்களின் அறிக்கையினை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

அதேவேளை சமஷ்டியின்றி பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி தயாராகும் இந்த அரசியல் யாப்புக்கே எதிர்ப்புத் தெரிவிக்கப்படுமாயின் நாடு அழிவை நோக்கி செல்வதை யாராலும் தடுக்க முடியாது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்டம்
## தொழில் நுட்பக் கல்லூரி

இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**A/L 2017** தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

**விசேட செயலமர்வு**

| திகதி | பாடம் |
|---|---|
| 7,8,9 | பொறியியல் தொழில் நுட்பம்<br>உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் |
| 10,11 | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் |
| 15,16,17 | I.C.T , விவசாயம், புவியியல் |

நேரம் காலை 8.30 – 2.00 (9680)

குறிப்பு :
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகு ரீதியாக தெளிவுபடுத்தப்படும்
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாளும் அதற்குரிய விடைகளும் விளக்கங்களும் வழங்கப்படும்
- எதிர்பார்க்கை செயன்முறை தொடர்பான விளக்கங்கள் இடம்பெறும்

முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

கட்டணம் அறவிடப்படும்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு 0772487774

# எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (9687)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.06.2017 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் **கந்தசாமி இராசசுந்தரம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் 07.07.2017 நாளை வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை நடைபெற்று வீட்டுக்கிரியைகள் நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (9692)

காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

2018 ஜனவரி பரீட்சைக்கான
**aat (Sri Lanka)**
**(AA1, AA2. AA3)**
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

## Ex Degree (BA)

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL)**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

கலைமாணிப்பட்டப்படிப்புகள் (வெளிவாரி) அரையாண்டு அடிப்படை 2013 / 2014 விரி வுரைகள் ஆரம்பமாகின்றன. பதிவுகளை மேற் கொள்ளவும்.

**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

(C-8941)

# விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-8920)

**UK-550*/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

# டோமன் நாய்க்குட்டி உடன் விற்பனைக்கு

இரண்டு மாத வயதுடையதும் தடுப்பூசி போடப்பட்டதுமான டோமன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 077 229 2436** (9704)

உ

ஓம் சாயி

வளமான வழித்துணை



# குருபூர்ணிமா விழா

எதிர்வரும் 08.07.2017 சனிக்கிழமை ஷீரடிபாபாவின் சிறப்பு நாளான குருபூர்ணிமா தினத்தன்று காலை 8.00 மணிமுதல் 11.00 மணிவரை பாபாவின் அடியவர்களின் கைகளால் பாபாவிற்கு பால் அபிஷேகம் இடம்பெறும்.

தொடர்ந்து அபிஷேகம், விசேடபூஜை, பஜனை வழிபாடு, அன்னதானம் என்பன இடம்பெறும்.

**பாபாவின் அடியவர்களை அன்போடு அழைக்கின்றோம்**

ஸ்ரீ ஷிரடிபாபா பிரார்த்தனை மையம்
சோமஸ்கந்த அன்னசத்திரம்
சுன்னாகம் வீதி, புத்தூர்.

ஆலய தொடர்பு :
T.P : 077 353 0368

ஊடக அனுசரணை
- E.C.G
- ஆய்வுக்கூட சேவைகள்

T.P : 021 205 8881, 077 778 9317

**பிள்ளையார் மெடிக்கிளினிக்**
(விசேட வைத்திய நிபுணர்களின் வைத்திய நிலையம்)
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

(9702)

# பணி நிலை வேண்டுகை

ஆனைக்கோட்டை மற்றும் சுண்டுக்குளி பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிக்கு வெற்றிடம் காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பதவி | : | அலுவலகப் பணியாளர் (பெண்கள்) |
| எண்ணிக்கை | : | இரண்டு (2) |
| கல்வித் தகைமை | : | க.பொ.த. சாதாரணம் |
| சம்பளம் | : | முதல் ஆறுமாதங்களுக்கு 9000/-<br>பின்னர் சம்பளம் அதிகரிக்கப்படும் |

(9700)

சுயவிபரத்தை அனுப்ப வேண்டிய முகவரி

**75/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் : yarlaid@gmail.com

தொ.பே. : 076 618 5590

TDA

தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள

# தென்மராட்சி அபிவிருத்திக்கழகங்கள் - (TDA)

இணைந்து நடாத்தும் தென்மராட்சி விழா - 2017

## மாபெரும் விளையாட்டு சுற்றுப்போட்டி

1. தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங் களுக்கிடையேயான மென்பந்து துடுப்பாட்டம் (ஆண்கள்)
2. தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்து போட்டி (பெண்கள்) (அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.)

- ➢ விண்ணப்பம் இலவசம்
- ➢ விண்ணப்பங்கள் கடித தலைப்பில், தெளிவான முகவரி, தொடர்பு தொலைபேசி இலக்கம் என்பன குறிப்பிட்டு பின் வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- ➢ போட்டிகள் தொடர்பான விபரங்கள். விதிகள் அனுப்பி வைக்கப்படும்.
- ➢ விண்ணப்பமுடிவு - 14.07.2017

## மேலதிக விபரங்களுக்கு

| | | |
|---|---|---|
| செயலாளர் | : | 077 316 4236 |
| இணைப்பாளர் | : | 077 413 1434 |

(C-8969)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org